Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + II

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 29 வியாழக்கிழமை (11.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 175

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# தேர்தல்

# ஓகஸ்ட் 5

## மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். மேலும் தேர்தல்கள் தொடர்பான அதி சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு நேற்று மாலை வெளியிடப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)

கொரோனா வைரஸ் பாதிப்பு **1869** புதிய தொற்றாளர்கள் **10** பலி **11**

தனியார் கல்வி நிலையங்களை

## 100 மாணவர்களுடன் ஜூன் 29ஆம் திகதி ஆரம்பிக்க அனுமதி

(கொழும்பு)

தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புகளுக்கு ஜூன் 29ஆம் திகதி தொடக்கமே அனுமதி வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஒரு வகுப்பறையில் 100 மாணவர்கள் என்ற கட்டுப்பாட்டுடன் கல்வி செயற்பாடு 15

## மத ஸ்தலங்களில்

### 50 பேருடன் வழிபட அனுமதி

(கொழும்பு)

ஆலயங்கள் உட்பட மத வணக்க ஸ்தலங்களில் வழிபாடுகளை நடத்த நாளை வெள்ளிக்கிழமை முதல் கட்டுப்பாடுகளுடன் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கோவிட்-19 கட்டுப்பாடுகளைப் பின்பற்றி 50 பேருடன் வழிபாடுகளை நடத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-3)

## அனைத்து பூங்காக்கள் மிருகக்காட்சிசாலைகள் சரணாலயங்கள்

### ஜூன் 15 முதல் திறக்க அனுமதி

(கொழும்பு)

கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் முகமாக நாடளாவிய ரீதியில் மூடப்பட்டிருந்த அனைத்து பூங்காக்கள், சரணாலயங்கள் மற்றும் மிருகக் காட்சிசாலைகள் எதிர்வரும் ஜூன் 15 முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக 15

## தரம்–05 புலமைப்பரிசில் பரீட்சை


வினாத்தாள் உள்ளே...

## யாழ்ப்பாணம் நாகவிகாரை மீது இனந்தெரியாதோரால் கல்வீச்சு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியிலுள்ள நாகவிகாரை மீது நேற்று அதிகாலை இனம்தெரியாத நபர்களால் கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியிலுள்ள நாகவிகாரை மீது இனம் தெரியாத மர்ம நபர்கள் நேற்று அதிகாலை கற்களைக் கொண்டு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். 15



## பிறந்தநாளன்று தமிழக எம்.எல்.ஏ

### கொரோனாவுக்கு பலி

(சென்னை)

கொரோனாவிற்கு சிகிச்சை பெற்று வந்த தமிழக தி.மு.க. எம்.எல்.ஏ. ஜெ.அன்பழகன் நேற்று உயிரிழந்துள்ளார். கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் 15

இந்திய வியாபாரியுடன் தொடர்பு

## பரிசோதனையில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட இந்திய புடவை வியாபாரியுடன் யாழ்ப்பாணத்தில் தொடர்பை பேணியவர்கள் என்ற அடிப்படையில் பி.சி.ஆர்.பரிசோதனை செய்யப்பட்ட 28 பேருக்கும் கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 15

முல்லைத்தீவில்

## ஒருவருக்கு கொரோனா

(முல்லைத்தீவு)

நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல 15

## யாழ்.இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் இருவர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இந்திய பிரஜை கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ள நிலையில் யாழ்.இந்தியத் துணை தூதரகத்தில் பணியாற்றிய இரு அதிகாரிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 15

## 32 பவுண் நகை வாள்முனையில் கொள்ளை

### தெல்லிப்பழை அம்பனையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

முகமூடி அணிந்த கொள்ளைக் கும்பலினால் வாள்முனையில் 32 பவுண் தங்க நகை மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று அதிகாலை தெல்லிப்பழை அம் 15

## சுகாதார விதிமுறைகளை மீறி தேர்தல் பிரசாரம் செய்தால் சட்ட நடவடிக்கை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சாலிய சேனாரத்ன

(கொழும்பு)

சுகாதார பிரிவினால் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமையவே பொதுத் தேர்தல் பிரசார கூட்டங்களை முன்னெடுக்க அரசியல் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த சட்டவிதிகளை மீறி செயற்படுபவர்கள் தொடர்பில் பொலிஸார் அவதானமாக இருப்பதுடன், அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் தயாராக இருப் 15

# இலங்கையில் மீண்டும் கொரோனா பரவும் ஆபத்து

## சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி எச்சரிக்கை



(கொழும்பு)

**இலங்கையில் ஆங்காங்கே நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக கொரோனா வைரஸ் மீண்டும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் ஒன்று கூடினால் கொரோனா பரவும் ஆபத்து மீண்டும் நாட்டினுள் ஏற்படும் என வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

எனினும் மக்கள் அவற்றினைக் கருத்திற் கொள்ளாமல் ஒன்று கூடுவதற்கே முயற்சிக்கின்றார்கள். அதற்கும் மேலதிகமாக நாட்டின் பல இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்துகின்றார்கள்.

இதனால் சமூகத்திற்குள் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவுவதற்கு ஆபத்துக்கள் உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடு முழுமையாக திறக்கப்பட்டு இரண்டு வாரங்களாகியும் இதுவரையில் சமூகத்திற்குள் கொரோனா நோயாளிகள் பதிவாகவில்லை என்பது மகிழ்ச்சியளிக்கின்றதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# கருத்துச் சுதந்திரம் இல்லாவிட்டால் சுதந்திர நாடாக இருக்க முடியாது

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

அமைதியான முறையில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் மக்களுக்கு உண்டு எனும் அதேவேளை, அதுவே ஜனநாயகத்தின் அடிப்படைக்கூறாகும். கருத்துச்சுதந்திரம் இல்லாவிட்டால் அது ஒரு சுதந்திர நாடாக இருக்கமுடியாது என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அமெரிக்காவின் மினிசோட்டா மாநிலத்தின் மினியாபோலிஸ் நகரில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ப்ளாய்ட் வெள்ளையின பொலிஸ்காரர் ஒருவரால் முழங்காலினால் கழுத்து நசுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்குக் கண்டனம் வெளியிடும் வகையில் கடந்த திங்கட்கிழமை முன்னிலை சோசலிஸக் கட்சியினால் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக அமைதிப்போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு எதிராக ஆரம்பத்திலேயே பொலிஸாரினால் நீதிமன்றத்தடையுத்தரவு பெறப்பட்டிருந்த நிலையில், அதனை மீறி அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது.

பொலிஸாரின் இச்செயற்பாட்டிற்குப் பல்வேறு தரப்பினரும் கண்டனம் வெளியிட்டு வரும் நிலையிலேயே கரு ஜயசூரிய இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது,

"சட்ட ரீதியாகவும், அமைதியான முறையிலும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் மக்களுக்கு உண்டு. கருத்துச் சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் அடிப்படைக்கூறு என்பதுடன், அதனை அரசாங்கமும் நாட்டுமக்களும் பாதுகாப்பது இன்றியமையாததாகும். கருத்துச் சுதந்திரமின்றி ஒரு சுதந்திரமான நாடு இருக்க முடியாது" என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். (ம-3)


# மரண அறிவித்தல்

## முனியாண்டி குப்புசாமி

பிறப்பு 04 - 12 - 1937

இறப்பு 10 - 06 - 2020



மன்னாரைப் பிறப்பிடமாகவும் கனகராயன்குளம் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முனியாண்டி குப்புசாமி நேற்று (10.06.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முனியாண்டி - சரஸ்வதி தம்பதியரின் மகனும் கமலாவின் அன்புக் கணவரும் நாகநந்தினி (கௌரி), கவிதா (பிரியன் பல்பொருள் வாணிபம்), ஜெயந்தன் (இத்தியடிப் பிள்ளையார் பல்பொருள் வாணிபம் - கனகராயன்குளம்), ஜெகன் (இத்தியடிப் பிள்ளையார் ஹாட்வெயார் - கனகராயன்குளம்), நிசாந்தினி (சிவன் ஸ்ரோர்ஸ் - கனகராயன்குளம்), நிமலன் (இத்தியடிப் பிள்ளையார் பான்சி ஹவுஸ் - கிளிநொச்சி) ஆகியோரின் தந்தையும் பசில் செல்வநாயகம், ரவிச்சந்திரகுமார், பிரபா, தனுசா ஆகியோரின் மாமனாரும் சஜிப்பிரியன், கலைப்பிரியன், டினுப்பிரியன், மிதுனகன், அக்சனா, பிரித்திகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (11.06.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கனகராயன்குளம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனகராயன்குளம்
077 503 2137


தகவல்:-
குடும்பத்தினர்

(C-9688)

# முதலாளித்துவக் கொள்கை கொண்ட ஐ.தே.க. எப்படி தொழிலாளர்களுக்கு சம்பளம் தரும்

## 1000 ரூபாய் பெற்றுத்தரும் என்பதும் பகல் கனவே

### மக்கள் சக்தி வேட்பாளர் இராதாகிருஷ்ணன்



(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் பெற்றுத் தருவார்கள் என்பது பகல் கனவு என ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அமைப்பாளர்களுடனான சந்திப்பு நுவரெலியாவில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது அமளிதுமளி ஏற்பட்டு தொழிலாளர் பிரதிநிதிகள் சிறிகொத்தாவில் இருந்து வெளியேறிய சம்பவம் யாவரும் அறிந்த விடயம். இவர்களுக்கே இப்படி என்றால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் இதே நிலைதான் ஏற்படும்.

பொதுவாக ஐ.தே.க. தொழிலாளர்சார் கட்சியல்ல. முதலாளிசார் கட்சி என்பது யாவருக்கும் தெரியும். இவர்கள் முடிந்தளவு முதலாளித்துவ நலன் குறித்தே செயற்படுவர். மலையகப் பெருந்தோட்டங்களை எடுத்துக்கொண்டால், 95 வீதமான தோட்டங்கள் தனியார் முதலாளிகளுக்கே சொந்தமானது.

இந்நிலையில் இவர்கள் எப்படி பெருந்தோட்ட மக்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்க முன்வருவார்கள். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பேச்சுவார்த்தையின் போது அரசாங்கத்தின் அமைச்சராக இருந்தவர் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் நவீன் திசாநாயக்க. இவரே அனைத்திற்கும் முட்டுக்கட்டையாக இருந்தவர்.

இவர் இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டியிடுகின்றார். இவருக்கு பெருந்தோட்ட மக்கள் நல்ல பாடம் ஒன்றினைக் கற்பிப்பர் என நான் நினைக்கின்றேன்.

தற்போது பொதுத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. இந்தத் தேர்தல் முடிந்தவுடன் பெருந்தோட்ட மக்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்குதல் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதற்கு ஒரு திடமான அரசாங்கம் வேண்டும். அதுவும் தொழிலாளர்கள் சார்பில் அக்கறை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

அதற்கு பொருத்தமானது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கம் என்று நினைக்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-4)

# அமைதியாக எதிர்ப்பை வெளியிட்டவர்களிடம் அரசு அராஜகத்தைப் பிரயோகிப்பது சரியா?

## மங்கள, பிமல் கடும் கண்டனம்

(கொழும்பு)

அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக அமைதியான முறையில் எதிர்ப்பை வெளியிட்டவர்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, பிமல் ரத்நாயக்க ஆகியோர் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.



நிராயுதபாணியான கறுப்பினத்தவரான ஜோர்ஜ்ஃபிலாய்ட் மினிசோட்டா மாநிலத்தின் மினியாபோலிஸ் நகரில் வெள்ளையின பொலிஸார் ஒருவரால் முழங்காலினால் கழுத்து நசுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து, அமெரிக்கா உட்பட உலகின் பல பாகங்களிலும் இச்சம்பவத்திற்குக் கடும் கண்டனம் தெரிவிக்கும் விதமாக பாரிய போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச்சம்பவத்திற்குக் கண்டனம் வெளியிடும் வகையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னிலை சோசலிசக் கட்சியினால் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக அமைதிப்போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக ஆரம்பத்திலேயே பொலிஸாரினால் நீதிமன்றத் தடையுத்தரவு பெறப்பட்டிருந்த நிலையில், அதனைமீறி அமைதிப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது. பொலிஸாரின் இச்செயற்பாட்டிற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, பிமல் ரத்நாயக்க ஆகியோர் தமது டுவிட்டர் பக்கங்களின் ஊடாகக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து மங்கள சமரவீர வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "அமைதி வழியில் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மிருகத்தனமானதும் வெட்கக்கேடானதுமான விடயமாகும். பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியும் கைது செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புதிய செயலணியின் மூலம் உருவாக்க முயற்சிக்கும் நல்லொழுக்கமுள்ள சமுதாயம் இதுதானா? இலங்கையே, விழித்துக்கொள். ஒரு இராக்கனவு விரிவடைந்து கொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தனது டுவிட்டர் பக்கத்தில், "அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் அவர்கள் கைது செய்யப்பட்டமையும் கடும் கண்டனத்திற்குரியதாகும்.

அமெரிக்கப் பிரஜையொருவரால் வெள்ளை மாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முடியுமெனில், கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்திற்கு முன்பாக எதிர்ப்பை வெளியிடுவது எவ்வாறு அத்துமீறலாகக் கருதப்பட முடியும்? "இரட்டைக் குடியுரிமை ஆட்சியாளர்கள்" தாம் அமெரிக்க அரசாங்கத்தையும் விட மேலான அமெரிக்கர்கள் என்பதைக் காண்பிக்கிறார்கள்" என்று சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# நீதிமன்ற உத்தரவை மீறி போராட்டம் நடத்துவது தவறு

## ரோஹித அபே குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த நிலையில் போராட்டங்களில் ஈடுபடுவது குற்றமாகும் என்று மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக் கிரியையும், அமெரிக்க தூதரகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டத்தையும் தொடர்புபடுத்தி கருத்துரைக்க முடியாது என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க தூதரகத்திற்கு முன்பாக முன்னிலை சோசலிசக் கட்சியினர் முன்னெடுத்த போராட்டம் தவறான செயற்பாடாகும். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் போராட்டங்களில் ஈடுபடுவது பொறுப்பற்ற செயற்பாடாகும்.

நீதிமன்றம் போராட்டத்திற்கு தடையுத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாகவே பலர் கைது செய்யப்பட்டார்கள்.

மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்வதற்கு பெரும்பாலான மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டபோது தனிமைப்படுத்தல் சட்டம் மீறப்படவில்லையா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் முன் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கும், ஆறுமுகம் தொண்டமானின் இறுதிக் கிரியைக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை. இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்கள் எவரும் கொரோனா வைரஸ் தொற்று நோய்க்குள்ளாகவில்லை. அனைத்து நடவடிக்கைகளும் சுகாதார தரப்பினரது பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமையவே இடம்பெற்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# சிறைச்சாலையில் மீட்ட தொலைபேசிகளில் அதிகாரிகளின் புகைப்படங்கள்

## விசாரணைகள் ஆரம்பம்



(கொழும்பு)

சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலில் கைதிக் கூடங்களில் இருந்து மீட்கப்பட்ட கைத்தொலைபேசிகளில் இருந்து பல முக்கிய தகவல்கள் பெறப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நீர்கொழும்பு சிறையில் மட்டும் 61 கைத்தொலைபேசிகளும் நேற்று 3 கைத்தொலைபேசிகளும் மீட்கப்பட்டன.

அதேபோல் கொழும்பு மகசின் சிறையில் 12 தொலைபேசிகளும் கொழும்பு புதிய சிறைச்சாலையில் இரண்டு தொலைபேசிகளும் கண்டி போகம்பரை சிறைச்சாலையில் 4 கைத்தொலைபேசிகளும் மீட்கப்பட்டன.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் மீட்கப்பட்ட தொலைபேசி ஒன்றில் சிறைச்சாலை அதிகாரிகள் இருவரின் படங்கள் இருந்தமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் நீதிமன்ற உத்தரவின் பின்னர் அந்தத் தொலைபேசிகளில் உள்வந்த, வெளிச் சென்ற அழைப்புகள் பட்டியலை எடுத்து விசாரணை நடத்தவும் பொலிஸார் தீர்மானித்தனர்.

நீர்கொழும்பில் மீட்கப்பட்ட தொலைபேசி ஒன்றில் சிறைச்சாலை அதிகாரிகள் இருவரின் படங்கள் இருந்தமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-8)

# வெள்ளைவான் ஊடக சந்திப்பு விவகாரம் ராஜித சேனாரட்ன பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவரை நேற்று புதன்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த அவருக்கு, நீதவான் நீதிமன்றத்தில் கடந்த டிசெம்பரில் வழங்கப்பட்ட பிணையை கொழும்பு மேல் நீதிமன்றம் இரத்துச் செய்தது.

இதனையடுத்து, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவைப் பிறப்பித்தார்.

அதன் பின்னர் ராஜித சேனாரட்ன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடைந்ததைத் தொடர்ந்து, அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# புதிய கண்டுபிடிப்பாளர்களை தெரிந்து ஊக்குவிக்கத்திட்டம்

(கொழும்பு)

கொவிட் -9 நிலைமையைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டின் ஊடாக நூற்றுக்கணக்கான புதிய படைப்புகளின் உருவாக்கத்தை காண முடிந்ததாக சுகாதார அமைச்சின் ஆரம்ப சுகாதார சேவைகள் அதிகாரமளித்தல் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

இதுபோன்ற புதிய கண்டுபிடிப்பாளர்களை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர்சுகாதார சேவைக்கு அதிகமான உள்ளூர் தயாரிப்புகளை வழங்குவதற்கும் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகவே புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும் அவற்றுக்கு தொழில்நுட்ப வசதிகளையும் மற்றும் நிதியுதவியையும் வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சின் ஆரம்ப சுகாதார அதிகாரமளித்தல் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க உபகரண வசதி, தொழில்நுட்ப வசதி மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளையும் மற்றும் இங்கு குறிப்பிடப்படாத வேறு எந்த யோசனைகளையும் இதற்காக முன்வைக்கப்படும் பட்சத்தில் அது குறித்து பரிசீலிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற யோசனைகள் ஆரம்ப சுகாதார சேவைகள் அதிகாரமளித்தல் திட்டத்திற்கு முன்வைக்கப்பட்டால், அதனை நடைமுறைப்படுத்த தேவையான நிதியை வழங்கவும் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் சுகாதாரத் துறையில் புதுமையான படைப்புகளை உருவாக்க விரும்புவோர் சுகாதார அமைச்சின் இணையத் தளமான w.health.gov.lk என்பதை பார்வையிடலாம் அல்லது அந்த செயற்றிட்டத்தின் இணைய் முகவரியான www.pssp.health.gov.lk ஐயும் பார்வையிட முடியும்.

அல்லது விபரங்கள் மற்றும் பயன்பாடுகளுக்குக்கு .psspmoh.lk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ் சலை அனுப்பவும். புதிய படைப்பாளிகளுக்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# கோழிக்குஞ்சுக்கு நான்கு கால்கள் பார்வையிடக் கூடும் மக்கள்



(பரணகம)

ஊவா பரணகம-ரன்சிரிகம பிரதேசத்தில் விநோதமான கோழிக்குஞ்சு ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த கோழிக்குஞ்சுக்கு 4 கால்கள் காணப்படுவதுடன் ஏனைய கோழிக்குஞ்சுகளை விட வித்தியாசமானதாக காணப்படுகிறது தற்போது அது ஆரோக்கியமாக உள்ளதாகவும் இக் கோழிக்குஞ்சைப் பார்வையிடுவதற்கு மக்கள் வருவதாகவும் அதன் உரிமையாளர் தெரிவித்தார். (ஜ-4)

# இராசிபலன்

11.06.2020
வைகாசி 29, வியாழக்கிழமை
சஷ்டி முன்னிரவு 11.52 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 7.27 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
சந்திராஷ்டமம்- புனர்பூசம், பூசம்

வளவன்


மேஷம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆனந்தமான நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும்,முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.


மிதுனம்

பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழி பாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.


கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.


சிம்மம்

மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


கன்னி

உள்ளன்போடு பழகியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.


துலாம்

கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும்,பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு.


விருச்சிகம்

நண்பர்களின் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்,சுபகாரியப் பேச்சுக்கவில் முன்னேற்றம் காண்பீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


தனுசு

பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், தொலை பேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும்.


கும்பம்

நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்,சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள்,இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


மீனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

விடாமுயற்சி வேட்டைப் பொருளைக் கொன்றே தீரும்.

# சீனாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சீனத்துாதரகம் முன்பாக நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு முன்னெடுக்கவிருந்த ஆர்ப்பாட்டத்தினை இரத்துச் செய்யுமாறு கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

உலகளவில் கொரோனா வைரஸ் பரவுவதற்கு சீனாவே காரணம் எனத் தெரிவித்து, நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பினால் சீனத்தூதரகம் முன்பாக நேற்று புதன் கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவிருந்த நிலையில், தனிமைப்படுத்தப்பட்ட சட்டம் மீறப்படும் எனக்



கூறி கறுவாத்தோட்டம் பொலிஸார், நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியதனைத் தொடர்ந்து இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். இளையதம்பி பஞ்சலிங்கம்



அணையாத அன்பின்
ஜோதியே-அப்பா
ஆண்டுகள் இரண்டு
ஆனாலும் இன்ப ஒளி
அணையாமல் காக்கும்
இரு கரங்கள் நீங்கள்
ஈடு இணையில்லா
செல்வமே-அப்பா
உயரத்தில் எட்டாத
இமயம்-நீங்கள்
எங்கள் உள்ளத்தில்
என்றும் நீங்காத
நினைவலைகள்...


பிறப்பு 22.05.1943
இறப்பு 04.06.2018

(2988)

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்

# 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 12.05.2020 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்
அமரர்

## கந்தையா கிருஷ்ணபிள்ளை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
(11.06.2020) இன்று வியாழக்கிழமை
பகல் 11.00 மணியளவில் அன்னாரது
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்கள் வருகை தந்து
அன்னாரது ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும்,அதனைத்தொடர்ந்து
நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

(சி-9677)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

குடும்பத்தினர்.

# திறந்த பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் எந்திரவியல் பட்டமாணி கற்கைநெறி (Bachelor of Engineering Technology) மற்றும் விஞ்ஞான பட்டமாணி கற்கைநெறிக்கான (B.Sc Degree) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் மற்றும் இப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் விஞ்ஞான பொறியியல் அத்திபார கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்களும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கை நெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் யாழ். பிராந்திய நிலையத்தில் இடம் பெறும்.


விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திலும் www.ou.ac.lk/online application/ எனும் இணையத்தள முகவரி மூல மாகவும் சமர்ப்பிக்கலாம் என யாழ். பிராந்திய நிலைய உதவி பணிப்பாளர் கே.கந்த வேள் அறிவித்துள்ளார். (2-5)

# மண்டைதீவு மீனவர் படுகொலை 34 ஆம் ஆண்டு நினைவேந்தல்



மண்டைதீவு கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று காலை குருநகரில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் நடைபெற்றது. (படங்கள்:குருநகர் செய்தியாளர்)

# நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவம்; முப்பது பேர்களுக்கு மட்டுமே அனுமதி



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்ள நயினாதீவில் வசிக்கும் 30 அடியார்கள் மட்டும் அனுமதி வழங்க்கப்பட்டுள்ளது.

எனினும் அன்னதானம் வழங்குதல், சப்பற உற்சவங்கள் போன்றவற்றிற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் நேற்று புதன்கிழமை யாழில் நடைபெற்றது.

அதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து. தொடர்ந்து 18 நாட்கள் இடம் பெறவுள்ளது.

அதன்போது நயினாதீவு பகுதியிலுள்ள 30 அடியார்கள் மட்டும் கலந்துகொள்ள அனுமதி வழங்கியுள்ளோம்.

அதேவேளை, மஹோற்சவ காலத்தில் அன்னதானம் வழங்குவதற்கும் சுகாதாரப் பிரிவினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வெளியூர்களிலிருந்து வரும் எவரும் ஆலய உற் சவத்திற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

எனவே, இதனைக் கருத்திற் கொண்டு இம்முறை நயினாதீவு ஆலய உற்சவத்திற்கு வெளி இடங்களைச் சேர்ந்தவர்கள் ஆலயத்திற்கு வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். அதேவேளை தேர், சப்பற உற்சவங்கள் எதுவும் இடம் பெறமாட்டாது.

ஆலய உற்சவங்கள் அனைத்தும் உள்வீதி உடனேயே நிறைவு பெறவுள்ளது என மேலும் தெரிவித்தார். (2-5)



உலக சுற்றுச்சூழல் தின நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நடைபெற்றது.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் குழந்தைகளுக்கான தடுப்பூசி நிலையம் திறப்பு



(குப்பிழான்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் குழந்தைகளுக்கான தடுப்பூசி சிகிச்சை நிலையத் திறப்பு நிகழ்வு நேற்று புதன்கிழமை வைத்தியசாலை பணிப்பாளர் ஆர்.டி. ஜ்ே.விமலசேன தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். குமாரவேல் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு தடுப்பூசி நிலையத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தனர்.

இதுவரை காலமும் குழந்தைகளுக்கான தடுப்பூசி நிலையம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இயங்கி வந்த நிலையில் குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றுவதற்கான நிலையம் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இதேவேளை, குறித்த நிலையத்தில் பிறந்த குழந்தை முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ள முடியுமென இந்நிகழ்வில் கலந்து கொண்ட குழந்தை வைத்திய நிபுணர் சிவலிங்கம் ஜெயபாலன் தெரிவித்தார். (2-5-18)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டகல்வி பாடசாலைகளின் இந்து சமயம்,இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துறையாடல் இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வலிகாமம் கல்வி வலய கேட்போர் கூடத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெறும். (2-4-5)

# விபத்து

(அச்சுவேலி)

பட்டா ரக வாகனம் ஒன்று மின் கம்பத்துடன்மோதி விபத்துக்குள்ளானது. இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை அச்சுவேலி பத்தமேனி பாரதி வீதிச் சந்தியில் இடம் பெற்றது. இதில் மின் கம்பம் முறிந்ததுடன் பட்டாரக வாகனமும்சேதமடைந்தது. இது தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (2-5-28)

# தொடரும் மணற்கொள்ளை; முறையிட அஞ்சும் பொதுமக்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் வகைதொகையின்றி மண் அகழ்வு இடம்பெறுவதாக தென்மராட்சி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறிப்பாக கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி மற்றும் பாலாவி பகுதிகளிலும் சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு மற்றும் மறவன்புலோ பகுதிகளிலும் கடற்கரையை மிக அண்மித்த பகுதிகளில் அதிகளவில் மணல் அகழ்வு இடம் பெறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது கொரோனா நிலைமை காரணமாக அமுல் படுத்தப்படுகின்ற ஊரடங்கு வேளையில் கூட தென்மராட்சியில் மணற்கடத்தல் தாராளமாக இடம்பெறுகிறது.

சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்பாக பொலிஸாருக்கோ அல்லது உரிய திணைக்களங்களுக்கோ முறையிட பொதுமக்கள் அஞ்சுகின்ற நிலை காணப்படுகிறது. தென்மராட்சிப் பகுதியில் மணற் கொள்ளைக்கும் கசிப்பு உற்பத்திக்கும் எதிராக குரல் கொடுத்த பலர் தாக்கப்பட்ட மற்றும் வாள் வெட்டிற்கு இலக்கான சம்பவங்களும் பல இடம் பெற்றுள்ளன.

மணல் அகழ்வால் இயற்கை வளம் பாதிக்கப்படும் அதேவேளையில் சமூகத்திலும் பல்வேறுபட்ட வன்முறைச் சம்பவங்களும் தோற்றம் பெறுகின்றன.

எனவே உரிய திணைக்களங்கள் மற்றும் பொலிஸார் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தி இயற்கை வளத்தைப் பாதுகாப்பதுடன், சமூகங்களிடையே மோதல்கள் ஏற்படாமல் தடுப்பது காலத்தின் கட்டாயமாகக் காணப்படுகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக கடற்கரை வீதிகள் மற்றும் பிரதேசசபைக்கு உரித்தான வீதிகள் கடுமையாக சேதமடைந்து மாரிகாலத்தில் பயணிக்க முடியாத சூழல் ஏற்படுவதாகவும் பொதுமக்கள் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளனர். (2-5-30)

# தேசிய கல்விக் கொள்கை ஜனாதிபதியின் கவனத்திற்கு

(கொழும்பு)

தற்போது தயாரிக்கப்பட்டு வரும் புதிய "தேசிய கல்விக் கொள்கை" ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கையின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணி கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து தேசிய கல்விக்கொள்கையின் தற்போதைய நிலை பற்றி ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியது.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்திற்கு ஏற்ப "அனைத்து பிள்ளைகளுக்கும் சமமான கல்வி வாய்ப்பு" என்ற கருப்பொருளின் அடிப்படையில் கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

எடுக்கப்படும் தீர்மானங்கள் நாட்டுக்கும், எதிர்கால தலைமுறைக்கும் தாக்கம் செலுத்தக்கூடியது என்பதால் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கல்விக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

முன்பள்ளிகள் முதல் ஆரம்ப, இரண்டாம் நிலை, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி வரை அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் அனைத்து பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. கல்விக் கொள்கை தொடர்பான இறுதி அறிக்கை அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் அதனை குறைந்தது சுமார் இரண்டு மாதங்கள் விரிவான சமூக உரையாடலுக்கு உட்படுத்துமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

க.பொ.த.சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் காலம் மற்றும் மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவை எதிர்பார்த்திருக்கும் காலம் இரண்டு வருடங்களுக்கும் அதிகமாகும். அந்தக் காலப் பகுதியைப் பயன்படுத்தி ஆங்கிலம் மற்றும் கணனி தொழில்நுட்ப அறிவை நாட்டின் அனைத்து பிள்ளைகளுக்கும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (2-8)

# உலகை உலுக்கும் கொரோனா பாதிப்பு 73 இலட்சத்தை கடந்தது

(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் 4 இலட்சத்து 13 ஆயிரம் பேர் உயிரிழந்ததுடன் 73 இலட்சத்து 12 ஆயிரம் பேர் பாதிப்படைந்தனர்.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 215 நாடுகளுக்கு மேல் பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 73 இலட்சத்து 12 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 4 இலட்சத்து 13 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

கொரோனாவுக்கு சிகிச்சை பெறுபவர்களில் 54 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனா வைரஸுக்கு உலகம் முழுவதும் குணமடைந்தோர் எண்ணிக்கை 36 இலட்சத்தை நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


## கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: சூரிசெவ் 10 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. Photography study in India புகைப்படப் பிடிப்பாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7166

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சாரதி
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7167

பிறப்பு: 1980 கிறிஸ்தவம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:- B.Sc., B.Sc Eng.
எதிர்பார்ப்பு:- படித்த பெண் பண்டத்தரிப்பு, சில்லாலை, இளவாலை, கரம்பொன், ஊர்காவற்றுறை மணமகள் விரும்பத்தக்கது.
தொ.இ: B/7170

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா:- செவ் 9 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த பிரான்ஸில் பணிபுரிகின்றார்.
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7171

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: செவ் 10 இல் உயரம்:- 5"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த தனியார் மருந்துக்கடையில் பணிபுரிகின்றார்.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் இவர் கணவனை இழந்தவர்.
தொ.இ: G/8147

பிறப்பு : 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா : செவ் 6 இல் உயரம் : 5'4"
தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர்.
எதிர்பார்ப்பு:- அவுஸ்திரேலியா மட்டும் பொறியியலாளர், கணக்காளர் போன்ற உத்தியோகத்தர்
தொ.இ: G/8149

பிறப்பு : 1997 இந்து
நட்சத்திரம் : பூரட்டாதி 2
கி.பா : செவ் 9 இல் உயரம்: 4'8"
தகைமை/தொழில்:- க.பொ.த.சா/த
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8157

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா:- செவ் 6 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த
எதிர்பார்ப்பு:-வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8187

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



உ
ஸ்ரீ ராமஜெயம்

## விவாக சோபன வாழ்த்துக்கள்

இன்றைய நன் நாளில் ஸ்ரீ நகுலேஸ்வரப்பெருமான், ஸ்ரீ மாவைக்கந்தன், ஸ்ரீ விஸ்வநாதப்பெருமான், ஸ்ரீ லங்நவ் விநாயகர், ஸ்ரீ கோப்பாய் முத்துமாரி அம்பாள் திருவருட் துணையுடனும் பெரியோர்களின் ஆசியுடனும் கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்ரஹணம் செய்யும்

"வேரற்கேணி" மட்டுவிலைச் சேர்ந்த
குமாரசாமிக்குருக்கள் மீனாட்சியம்மா தம்பதியரின் பௌத்திரியும்
மாவிட்டபுரம் தாணு ஐயர் மீனாட்சியம்மா தம்பதியரின் தௌஹித்திரியும்
எமது ஏக புத்திரியுமான

**சௌபாக்கியவதி ராஜினி**

நகுலேஸ்வர ஆதீனத்தை சேர்ந்த
கார்த்திகேயக்குருக்கள் சாரதாம்பாள் தம்பதியரின் பௌத்திரனும்
மாவை ஆதீனம் துரைச்சாமிக்குருக்கள் விசாலாட்சியம்மா தமபதியரின் தௌஹித்திரனும்
எமது ஜேஷ்ட புத்திரனுமான

**சிரஞ்சீவி சுப்பிரமணியசர்மா**

**தம்பதியினரை வாழ்த்துகின்றோம்**

ஸ்ரீமதி இலட்சுமியம்மாள்
மங்களேஸ்வரசர்மா
75, நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
+94770366129



ஸ்ரீமான் கா.துரைச்சாமிக்குருக்கள்
அகிலாண்டேஸ்வரி தம்பதியினர்
அட்டகிரி வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.
+94778458448, +41795510062

(2976)


# 608 கடற்படையினர் குணமடைவு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த 45 கடற்படையினர் குணமடைந்து நேற்று முன்தினம் வீடு திரும்பினர்.

குறித்த கடற்படையினருக்குத் தொடர்ச்சியாக பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் முடிவுகளின் அடிப்படையில் அவர்கள் தொற்றற்றவர்கள் என உறுதி செய்யப்பட்ட பின்னரே வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதன்படி இதுவரை 608 கடற்படையினர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

அத்துடன் குறித்த கடற்படையினரில் 35 பேர் இராணுவ வைத்தியசாலையிலும் 10 பேர் ஹோமாகம வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வந்தவர்கள் என கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. மேலும் குணமடைந்து வீடு திரும்பிய கடற்படையினர் அனைவரும் மேலும் 14 நாட்கள் தமது வீடுகளில் தம்மை சுயதனிமைப்படுத்தப்படல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஜ-8)

# மணல் ஏற்றிச்சென்ற 10 பேர் கைது

(திருமலை)

திருகோணமலை-கந்தளாய் பகுதியில் அனுமதிப்பத்திர விதிமுறைக்ளை மீறி மணல் ஏற்றிச் சென்ற லொறி சாரதிகள் 10 பேர் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சாரதிகள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகாவலி கங்கையிலிருந்து கொழும்பிற்கு மணல் ஏற்றிச்சென்றபோது அனுமதிப்பத்திரத்தில் வழங்கப்பட்டிருந்த விதிமுறைகளைப் பின்பற்றாது சென்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஜ-8)

# இயற்கைக்கான தருணமும் இயைவாக்கம் அடையவேண்டிய சூழலும்


பா.ராஜ்குமார்

யாழ்.மாவட்டத்தில் நிலையான சூழல் பாதுகாப்பு குறித்தும் இயற்கையுடன் ஒன்றிணைந்த சமூகத்தினை கட்டியெழுப்புவது குறித்தும் செயற்படவேண்டிய தருணத்தில் நாம் ...

### அறிமுகம்

உலக சுற்றாடல் தினம் சுற்றுச் சூழலியல் ரீதியில் மிகவும் முக்கியமான நாளாகும். அரசாங்கங்கள், குடிமக்கள், வியாபார பிரிவினர் உள்ளிட்ட அனைவரும் சுற்றுச்சூழல் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனும் நோக்கில் 1974 லிருந்து கொண்டாடப்பட்டு வரும் நாளாக சூழல் தினம் காணப்படுகின்றது.

உலக சுற்றாடல் தினம் ஜூன் 5, 2020 இற்கான பிரதான கருப்பொருளாக (Theme) இயற்கைக்கான தருணம் (Time for nature) அதாவது உயிர்ப் பல்வகைமை குறித்தும் அதன் பாதுகாப்பபு குறித்தும் அதீத கவனம் கொள்ள வேண்டிய காலமாக இது அமைகின்றது. 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சீனாவிலிருந்து ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று உலகமெங்கும் பரவலடைந்து 390,000 மேற்பட்ட உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதுடன் 60 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இத்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னமும் கட்டுப்படுத்த முடியாத



சவால் மிக்கதாக உலகின் அனைத்து கட்டுமானங்களின் செயற்றிறனை இடைநிறுத்திய உயிர்கொல்லி வைரஸாக கொரோனா விளங்குகின்றது. இக் கொரோனா தொற்று பரவல் காரணமாக உலகில் 19 நாடுகளில் பொது முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப் பொது முடக்கமும், ஊரடங்கு நடைமுறையும் மக்களை வீட்டிலிருக்க வகை செய்தன. தொழிற்சாலைகள், வாகனப் போக்குவரத்துகள் உள்ளிட்ட அனைத்தும் நிறுத்தபட்டன.

இதனால் வளிமண்டலத்திற்குச் செல்லும் மாசுக்கள் என்றுமில்லாதவாறு குறைவடைந்தன. எல்லா மக்களும் தொடர்ச்சியாக வீட்டிலிருந்ததனால் இயற்கையை பற்றி சிந்திக்க முனைந்தார்கள். சுத்தமான காற்று, குடிநீர், ஆரோக்கிய உணவு என்பனவற்றை நுகர்ந்தார்கள். இந்நிலையில் வீட்டுச்சூழல் தொகுதி மன அமைதியையும், ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் தந்தது. வரையறுக்கப்பட்ட உணவுக் கிடைப்பனவு உள் மற்றும் வெளிசெல்லலுக்கான கட்டுப்பாடுகள் இருந்த வேளையில் மன அழுத்தத்திலிருந்து விடுவித்து உமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்து கொரோனா தொற்றுப் பரவலிலிருந்து மட்டுமன்றி ஏனைய தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களிலிருந்தும் எம்மைப் பாதுகாத்தது, பாதுகாத்துக் கொண்டிருப்பது எம்மைச் சூழ்ந்து காணப்படும் இயற்கையே என்ற வகையில் இயற்கை குறித்த எமது கவனத்தை முக்கியப்படுத்தவும் இயற்கையுடன் ஒன்றிணைந்த வாழ்வே நிலையான வாழ்வு எனும் சித்தாந்தத்தை வலியுறுத்தி இவ்வாண்டின் சூழல் தின கருப்பொருளின் தத்துவத்திற்கு அமைவாக யாழ்.மாவட்டத்தில் எமது வீட்டுச் சூழல் தொகுதியை மீள கட்டியெழுப்புதல் மற்றும் அதனை தொடர்ச்சியாக நிலைக்கச் செய்தல் போன்றனவற்றையும் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்களை விழிப்புணர்வு மற்றும் சூழலுக்கு இயைந்த அல்லது நட்புறவான அபிவிருத்தி செயன்முறையினூடாக பாதுகாப்பதையும், இயற்கைக்கு இயைவான, இயற்கையுடன் ஒன்றிணைந்த சமூகத்தை கட்டியெழுப்புதல் ஆகிய நோக்கங்களையும் வலியுறுத்தி இவற்றை இதயசுத்தியுடன் எல்லாத் தரப்பினரது பங்களிப்புடன் நடைமுறைப்படுத்துவதற்கான தருணம் இது என்ற வகையில் எல்லோருடைய கவனத்தையும் வலியுறுத்தும் வகையில் யாழ்.மாவட்டச் செயலகத்தால் இக்கட்டுரை பிரசுரமாகிறது.

உயிர் பல்வகைமை என்பது பூமியில் உள்ள எல்லா உயிர்வாழ் அங்கிகளினதும் அவற்றின் வாழ்க்கை முறைகளையும் உள்ளடக்கியது ஆகும். நாம் உண்ணும் உணவு, சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர், எங்கள் பூமியில் சாத்தியமான வாழ்க்கைக்கு பங்களிக்கும் காலநிலை என எல்லாம் இயற்கையிலிருந்து வந்தவையாகும். எனவே உயிர் பல்வகைமையென்பது மனிதனின் ஆரோக்கிய வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிற்கும் பங்களிக்கும் அடிப்படையான ஒன்றாக அமைகிறது. எமது இலங்கை நாடு செழிப்புமிக்க உயிர் பல்வகைமையை கொண்டது. எமது வட பகுதி அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் உயிர் பல்வகைமை அடிப்படையில் செழிப்பான நிலையில் காணப்படுகின்றது.

இங்கு காணப்படும் கடல்நீரேரிகள், கண்டல் தாவரங்கள் என்பன பெறுமதிமிக்க உள்நாட்டு மற்றும் குடிபெயர் பறவைகளின் பிரதான வாழ்விடமாக அமைகின்றன. அதுமட்டுமன்றி பெருமளவான கடல் வாழ் உயிரினாங்களின் வாழ்விடமாகவும் இவை அமைகின்றன. இவற்றை விட மாவட்டத்தை சூழ்ந்து காணப்படும் கடற்பகுதி, வடமராட்சி கிழக்கு பகுதியிலுள்ள அழகிய மணல் மேடுகள், ஏனைய இயற்கை தாவரங்கள் மற்றும் குளங்கள் போன்றன எமது இயற்கைச்சூழல் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான வளங்களாக காணப்படுகின்றன.

### துரித கிராம - நகரமயமாக்கமும் வீட்டுச் சூழல் தொகுதி இழப்பும் வீட்டுச்சூழல் தொகுதியின் முக்கியத்துவம்

இவ்வாறு விளங்கும் சூழல் தொகுதிகளில் வீட்டு சூழல் தொகுதி என்பது பிரதானமானதொன்றாக விளங்குகின்றது. இயற்கையாகவும் மக்களாலும் உருவாக்கப்பட்ட இச் சூழல்தொகுதி ஆரோக்கியமான காற்று, சுவாசம், குடிநீர், உணவு, மருந்து, பொருளாதாரம் மற்றும் ஏனைய வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு சூழல் தொகுதியாக விளங்குவதுடன் எமக்கு மன அமைதியையும் ஆரோக்கியத்தையும் தந்த, தருகின்ற ஒரு சிறந்த சூழல் தொகுதியாக வீட்டுச்சூழல் தொகுதி விளங்கியது.

மூன்று தசாப்தகால யுத்தமும் அதன் விளைவான இடம்பெயர்வு மற்றும் புலம்பெயர்வு போன்றனவும் மக்களின் நவீன வாழ்க்கை முறைப்போக்குகள் போன்றனவும் இச்சூழல் தொகுதியின் செயற்றிறனை முற்றாக அழிவடையச் செய்துள்ளது. இதன் விளைவாக பல பெறுமதிக்க வதிவிடப் பறவைகள் மற்றும் ஏனைய உயிரினங்களை செழிப்பான வாழ்வை அழித்ததுடன் இச் சூழல்தொகுதி எமக்கு அளித்த ஆரோக்கிய வாழ்க்கையையும், மன அமைதியையும் தொலைத்து நிரந்தர நோயாளர்களாக நாம் மாறிவருவதுடன் எமது அடுத்த இளைய தலைமுறையினருக்கு அர்த்தமற்ற வாழ்க்கையை புகட்டும் அடிப்படைகளையும் வழங்கி வருகின்றோம்.

அதாவது 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது வீட்டுச் சூழல் தொகுதி சிறப்பான நிலையிலேயே இருந்தது. அதாவது வீட்டைச் சுற்றி அழகிய வேலிகள் மாமரம், கொய்யா, தேசி, தோடை, வேம்பு என பழமரங்களும், நிழல் மரங்களும்காணப்பட்டன. இவை எமக்கு ஆரோக்கியமான உணவு மருந்து என்பவற்றைத் தந்து எமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை வளர்க்க உதவின. அத்துடன் மன அமைதியை எமக்கு அளித்த்துடன் காலநிலை மாறுபாடுகளின் போது எம்மைப் பாதுகாத்தன.

### வீட்டுச்சூழல் தொகுதி இழப்பு

யாழ்ப்பாண மாவட்டம் 1995 ஆம் ஆண்டு பாரிய இடப்பெயர்வை சந்திப்பதற்கு முன்னர் இயற்கையுடன் இயைந்த வாழ்க்கையையே மக்கள் பின்பற்றினர். ஆயினும் 1996 ஆம் ஆண்டில் மீண்டும் மீளக்குடியமர்ந்த பின்னர் 2002 சமாதான சூழல் ஏற்படுத்தப்பட்டது வரை இயற்கையுடன் இயைந்த வாழ்க்கை தொடர்ந்து எம்மாவட்ட மக்கள் பின்பற்றி வந்தனர். 2002 ஆம் ஆணடிற்கு பின்னரான சூழலே யாழ்ப்பாண மக்களின் சமூக வாழ்வில் மாற்றங்கள் உருவாகத் தொடங்கிய காலமாகும். அதாவது புலம்பெயர்ந்த எமது மக்கள் பல வருடங்களின் பின்னர் தாயகம் நோக்கி வருகை தந்ததுடன் பல புதிய வீடுகள் கட்டப்பட்டன. எல்லாப் பகுதிகளிற்கும் மின்சார வசதி கிடைக்கத் தொடங்கியமையால் தொலைக்காட்சி பாவனை முதன்முதலாக எல்லா வீடுகளிலும் அதிகரிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக தமிழ்நாடு சின்னத்திரை சீரியல் நாடகங்கள் எமது மாவட்ட மக்களின் பிரதான பொழுதுபோக்கு விடயமாக மாறியது.


இதனால் வீட்டுச்சூழல் பராமரிப்பில் சற்று இடைவெளி ஏற்படத் தொடங்கியது. இந்நிலை தொடர்ந்து 2009 இறுதியுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் பல்துறைக் கட்டுமானங்கள் அதிகரிக்கத் தொடங்கின. 1995 இற்கு முன்னரும் 1996-2009 வரை கிராமங்கள் தோறும் பல்வேறு தனியார் காணிகள், பொதுக்காணிகள் காணப்பட்டன. இவ்வாறான காணிகளில் பல்வேறு பயன்தரு மரங்களும் மூலிகை மரங்களும் காணப்பட்டன. குறிப்பாக மாமரம், ஆல், அரசு போன்ற பெரிய மரங்களும் மற்றும் ஆமணக்கு, பன்னை, அன்னமுன்னா, அனிஞ்சில், மஞ்சு வண்ணா போன்ற மூலிகைத் தாவரங்கள் என்பன இயற்கைச் சூழலை பிரதிநிதித்துவம் செய்தன. இவை இயற்கைச் சூழலை பிரதிநிதித்துவம் செய்தது மட்டுமன்றி சிறுவர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான கிட்டிப் புல்லு, பேணியும் பந்தும், உத்தி, ஒளிச்சுப் பிடித்து விளையாடுதல், மாபிள் அடித்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்ற போது இயற்கையுடன் ஒன்றித்த வகையில் விளையாட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்டார்கள்.

(தொடரும்.....)



# சிறுவர் அரங்கம்

## முரட்டு ஆடு



அது ஒரு மலையடிவாரம்.

அதன் அருகே 'அழகிய ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அங்கே ஆறு ஓடிக் கொண்டிருந்ததால் மலையடிவாரத்தில் பச்சைப் பசேல் என்று புல் வளர்ந்திருந்தது.

மலையடிவாரத்தின் மேலே ஆங்காங்கே காணப்படும் சம' பரப்புப் பகுதியில் சின்னஞ்சிறு வீடுகள் இருந்தன. அங்கு வாழும் மக்கள் தங்களது பிழைப்புக்காக ஆடு, மாடு இன்னும் பிற கால்நடைகளை வளர்த்து வந்தனர். அதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் வளர்க்கும் ஆடுகள் மலையடிவாரத்தில் வளர்ந்துள்ள புல்லைத் தின்ன அங்கே மேய வரும். மாடுகளால் சரிவில் நிற்க முடியாததால் அவைகள் அங்கு வருவதில்லை.

அங்கே ஒரு முரட்டு ஆடு இருந்தது. உடல் பருத்து, கொம்புகள் இரண்டும் வளர்ந்து முறுக்கிக் கொண்டு நின்றன. அதைப் பார்த்து மற்ற ஆடுகள் பயந்து ஒதுங்கிப் போய்விடும். அதனால் அந்த முரட்டு ஆட்டுக்கு திமிர் வந்து விட்டது. அது மேய்ந்து கொண்டிருக்கும் இடத்தின் அருகே வேறு ஆடுகள் வந்து விட்டால் அவைகளை முட்டி தூர விரட்டி விடும்.

ஒரு நாள்! ஆற்றின் கரையோரம் மேய்ந்து கொண்டிருந்த ஆடு ஒன்று ஆற்றினோரம் வந்த முதலையைப் பார்த்து விட்டு பயந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி வந்தது. பயந்து ஓடி வந்த அந்த ஆடு முரட்டு ஆடு மேய்ந்து கொண்டிருந்த இடத்தின் அருகே வந்து விட்டது.

அதைப் பார்த்த முரட்டு ஆடு ஓடி வந்த ஆட்டைப் பார்த்து, "நான் மேய்ந்து கொண்டிருக்கும் இடத்திற்கு நீ எப்படி வரலாம்" என்று கோபமாகக் கேட்டது.

அதற்கு அந்த ஆடு, "அங்கே முதலையைப் பார்த்தேன். அதனால் வேகமாக ஓடி வந்து விட்டேன்" என்று அமைதியாகச் சொன்னது.


முரட்டு ஆடோ அது சொன்னதைக் கேட்கவில்லை. ஓடி வந்த அந்த ஆட்டுடன் சண்டை போட ஆரம்பித்தது. அந்த ஆடோ சண்டை போட விரும்பாமல் சமாதானமாகவே பேசியது. முரட்டு ஆடோ அது சொன்னதைக் கேட்கவில்லை. வேறு வழியின்றி அந்த ஆடு முரட்டு ஆட்டுடன் எதிர்த்து நின்று ஆக்ரோஷமாக சண்டையிட்டது.

மலைச் சரிவான பகுதியில் இரண்டு ஆடுகளும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்பொழுது முரட்டு ஆடு கால் சறுக்கி மலையடிவாரத்தில் உருண்டு போய் ஆற்றில் விழுந்தது.

ஆற்றின் கரையோரம் வாயைப் பிளந்து கொண்டு காத்திருந்த முதலை அந்த முரட்டு ஆட்டை கவ்விக் கொண்டு ஆற்றினுள்ளே சென்று விட்டது.

தானே பெரியவன் என்ற மமதை ஏற்பட்டால் இதுதான் கதி.

## வரைந்து பழகுவோம்



## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்





# செஹான் மதுஷங்கவின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் வீரர் செஹான் மதுஷங்க எதிர் வரும் 23 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டி நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிபதி ஜனனி சஷிகலா விஜேதுங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் செஹான் மதுஷங்க பன்னல பொலிஸாரால் கடந்த மாதம் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்தச்சம்பவத்தினை அடுத்து செஹான் மதுஷங்க, அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் இடைநீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஜ-4)

# விசேட அதிரடிப்படைக்கு புதிய கட்டளைத் தளபதி நியமனம்



(கொழும்பு)

விசேட அதிரடிப்படையின் புதிய கட்டளைத் தளபதியாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் வடக்கு பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவே விசேட அதிரடிப் படையின் (STF) கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஜ-8)

# உரப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

**உரம் வழங்கல், விநியோகம், பயன்பாடு என்பன தொடர்பில் விவசாய சமூகம் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.**

உரம் வழங்கல், விநியோகம் தொடர்பில் தற்போதைய நிலைமைகளை கண்டறிவதற்காக நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ, மாகாண ஆளுநர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றினர். இக் கலந்துரையாடலின் போது அவர் மேலும் தெரிவிக்கையில், பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பமாகியுள்ளதையடுத்து பல மாகாணங்களில் உரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே, சிறிய, நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் அதற்கு தீர்வு கண்டறியப்பட வேண்டும். நெல்லுக்கு அதிக விலை கிடைப்பதன் காரணமாக விவசாயிகள் பெருமளவில் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர்.

விவசாய இறக்குமதிகளுக்கான கட்டுப்பாடுகள், தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் மரக்கறி, பழங்கள் மற்றும் தானிய பயிர்ச் செய்கை காணிகளின் அளவு அதிகரித்துள்ளமையும் உரப் பிரச்சினைக்கு காரணமாகும் என்று அதிகாரிகளும் ஆளுநர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். வடக்கில் விவசாயிகள் சேதன உரப் பாவனைக்கு பழக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தைப் போன்று நாட்டின் ஏனைய மாவட்டங்களின் விவசாயிகளையும் சேதன உரத்தினை பயன்படுத்தச் செய்வதன் மூலம் சில சுகாதார பிரச்சினைகளில் இருந்தும் விடுபட முடியும். சேதன உரத்தினை உரிய நியமங்களுடன் உற்பத்தி செய்வது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் சேதன உரத்தினை விரைவாகப் பயன்படுத்தக் கூடிய பயிர்ச்செய்கை என்னவென்று கண்டறிதலும் அவசியமாகும். சேதன உரத்தைப் பயன்படுத்தி பயிரிடப்பட்டுள்ள விவசாய நிலங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி கண்டறிய வேண்டும்.

சேதன உரப் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் அறுவடைகளை கொள்வனவு செய்யும் போது அதிக விலையை நிர்ணயிப்பதற்கும் அதற்காக நிவாரணம் வழங்குவதற்கும் கவனம் செலுத்த வேண்டும். சேதன உர உற்பத்தியை பாரியளவிலான வியாபாரமாக முன்னேற்றுவதன் மூலம், இரசாயன உரத்திற்கான கேள்வியை குறைக்க முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். (ஜ-8)

# ஆனைவிழுந்தான் வயற்காணிகள் உடனடியாக விடுவிக்கப்படும்

## வனப்பாதுகாவலர் நாயகம் உறுதி

(கொழும்பு)

வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள ஆனைவிழுந்தான் வயற்காணிகளை உடனடியாக அம்மக்களுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வனப்பாது காவலர் நாயகம் மகிந்த செனவிரத்ன உறுதியளித்துள்ளார்.

ஆனைவிழுந்தான் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் நேற்று கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று வனப்பாது காவலர் நாயகம் மகிந்த செனவிரத்னவுடன் கலந்துரையாடியதோடு, குறித்த காணிகளை விடுவிக்கக்கோரி ஆனை விழுந்தான் மக்கள் சார்பில் எழுத்து மூலக் கோரிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தனர். அக்காணிகளை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியபோதே வனப்பாது காவலர் நாயகம் குறித்த காணிகளை உடனடியாக விடுவிப்பதாக உறுதியளித்துள்ளார்.

1984 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆனைவிழுந்தான் கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட இவ்வயற்காணிகளில் அவர்கள் தொடர்ச்சியாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த நிலையில், இறுதி யுத்தத்தின் பின்னர் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற காலப் பகுதியில் குறித்த காணிகளை வனப்பாதுகாப்புத் திணைக்களத்தினர் தமக்குரியதாக அடையாளப்படுத்தி அம்மக்களின் வாழ்வாதார செயற்றிட்டம் தடுக்கப்பட்டிருந்தது.

இக்காணிகளை விடுவிக்குமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கடந்த 2019.07.29 ஆம் திகதிய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, 2020.05.04 ஆம் திகதி நடைபெற்ற பிரதமருடனான கலந்துரையாடலிலும் வலியுறுத்தப் பட்டிருந்தது.


அதன்பின்னர் கடந்த 6 ஆம் திகதி ஆனைவிழுந்தான் வயற்காணிகளை நேரடியாக சென்று பார்வையிட்டு, அம்மக்களை சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் நேற்றையதினம் வனப்பாது காவலர் நாயகத்தை நேரில் சென்று சந்தித்தபோது இம்முடிவு எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2-5)

# கண்டாவளையில் பாரிய மண்ணகழ்வு முறியடிப்பு

# விற்பனைக்குத் தயாராகவிருந்த மணல் மீட்பு

(முறிகண்டி)

**கிளிநொச்சி கண்டாவளை பெரியகுளம் பகுதியில் பாரிய மண்ணகழ்வு நடவடிக்கை முற்றுகையிடப்பட்டது. கிராம உத்தியோகத்தரால் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக அப்பகுதிக்குச் சென்ற விசேட குழுவினால் குறித்த பகுதி முற்றுகையிடப்பட்டது.**





இதன்போது விற்பனைக்கு தயார் நிலையில் இருந்த 100 லோட்டுக்கும் அதிக மணல் கும்பிகள் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டன.

குறித்த பகுதியில் அமைந்துள்ள கனகராயன் ஆற்றுப்பகுதி மற்றும் அதனை அண்டிய வயற்காணியில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பில் பொது மக்களால் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்யப்படுகிறது.

இவ்வாறான நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலாளருக்கு பொதுமக்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக கிராம உத்தியோகத்தரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்தே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிக்கு நேற்று கண்டாவளை பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் கள விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது அப்பகுதியில் முறையற்ற வகையிலும், அனுமதியற்ற மணல் அகழ்வு இடம்பெற்று வருவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

அப்பகுதியில் சுற்றாடல் பாதிப்படையும் வகையில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றமை உறுதி செய்யப்பட்டதை அடுத்து கள விஜயம் மேற்கொண்டிருந்த பிரதேச செயலாளர் குறித்த விடயம் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின்கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குறித்த விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-5-106)

# கைகழுவும் இயந்திரம் கையளிப்பு



(நெளுக்குளம்)

வவுனியாவில் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட கை கழுவும் இயந்திரங்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றை தடுக்கும் நோக்கில் சுகாதாரத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுகாதார நடைமுறைகளை இலகுவாக்கும் முகமாக, ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் நிதி பங்களிப்புடன், கைகளைச் சுத்தம் செய்யும் இயந்திரங்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பனிமனையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம். மகேந்திரனிடம் கையளிக்கப்பட்டன. (2-5-299)

# குடைசாய்ந்தது வாகனம்; சாரதி படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா மடுக்கந்தைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் வியாபார நிலையங்களுக்கு பொருட்களை எடுத்துச் சென்ற விற்பனை வாகனம் குடை சாய்ந்ததில் காயமடைந்த சாரதி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மடுக்கந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

இவ்விபத்து பற்றி மேலும் தெரியவருகையில்,

நேற்றுக்காலை 8 மணியளவில் வவுனியாவிலிருந்து ஹெப்பிட்டிக்கொலாவ பகுதியை நோக்கிச் சென்ற குறித்த வாகனம் மடுக்கந்தை பாடசாலைக்கு முன்பாக நடுவீதியில் திடீரென குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் காயமடைந்த வாகனச் சாரதி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மடுக்கந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-5-299)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் 1998 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி 33 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட நினைவு தினம் அனுஷ்டிப்பதற்கு பொலிஸார் தடைவிதித்த போதும் தடையை மீறி நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று சுதந்திரபுரம் வெள்ளப்பள்ளம் இந்து மயானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் க.ஜீவராசா எனப் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்.)

# சுதந்திரத்திற்குப் பின்
## இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

14

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இரண்டாவது பாராளுமன்றம் (1989-1994) | | | |
|---|---|---|---|
| பிரதமர் 1989 மார்ச் 06- 1993 மே 07 டி.பி. விஜேதுங்க | பிரதமர் 1993 மே 17- 1994 ஓகஸ்ட் 10 ரணில் விக்கிரமசிங்க | எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க | சபாநாயகர் எம். எச். மொஹமட் |

| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மூன்றாவது பாராளுமன்றம் (1994-2000) | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரதமர் 1994 ஓகஸ்ட் 19- 1994 நவம்பர் 12 சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க | பிரதமர் 1994 நவம்பர் 14- 2000 ஓகஸ்ட் 09 ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க | பிரதமர் 2000 ஓகஸ்ட் 10- 2000 ஒக்டோபர் 15 ரட்ணசிறி விக்கிரமநாயக்க | எதிர்க்கட்சித் தலைவர் 25 ஓகஸ்ட் 1994- 24 ஒக்டோபர் 1994 காமினி திஸாநாயக்க | எதிர்க்கட்சித் தலைவர் 28 ஒக்டோபர் 1994- 10 ஒக்டோபர் 2000 ரணில் விக்கிரமசிங்க | சபாநாயகர் கே.பி. ரட்நாயக்க |

| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நான்காவது பாராளுமன்றம் (2000-2001) | | |
|---|---|---|
| பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க | எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க | சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க |

இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல்கள் தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் உறுப்பினர்களைப் பெறுகின்றன. பாராளுமன்றத் தேர்தல்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 20 தேர்தல் மாவட்டங்கள் நாட்டின் நிர்வாக மாவட்ட எல்லைகளையே தங்கள் எல்லைகளாகவும் கொண்டுள்ளன. ஏனைய இரண்டு மாவட்டங்களில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களையும், வன்னித் தேர்தல் மாவட்டம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களையும் தம்முள் அடக்கியுள்ளன.

98ஆவது சரத்தின் முதலாம் பிரிவு பாராளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் எனவும், இவர்களுள் 196 உறுப்பினர்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்படுவர் எனவும், இவர்களுள் 36 உறுப்பினர்கள் ஒரு மாகாணத்துக்கு நான்கு பேர் என்ற அடிப்படையில் 9 மாகாணங்களுக்கும் பிரித்தளிக்கப்படுவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் குறைந்தது ஒரு உறுப்பினரையாவது பெற்றுக் கொள்ளும் வகையில் இது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதனை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்குமான எண்ணிக்கை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

கொழும்பு-2, கம்பஹா-1, களுத்துறை-1, கண்டி-1, மாத்தளை-1, நுவரெலியா- 2, காலி- 1, மாத்தறை- 1, அம்பாந்தோட்டை- 2, யாழ்ப்பாணம்- 1, வன்னி - 3, மட்டக்களப்பு- 1, அம்பாறை- 2, திருகோணமலை- 1, குருநாகல்- 2, புத்தளம்- 2, அநுராதபுரம்- 2, பொலநறுவை- 2, பதுளை-2, மொனராகலை-2, இரத்தினபுரி-2, கேகாலை- 2, மொத்தம் 36.

எஞ்சிய 160 உறுப்பினர்களும் மாவட்டங்களில் வாக்காளர்களது விகிதாசாரத்துக்கேற்ப மாவட்டங்களுக்கு பிரித்தளிக்கப்படும். இதற்காக முழு இலங்கையினது மொத்த வாக்காளர் தொகையை 160 இனால் பிரிப்பதன் ஊடாக தேசிய கோட்டாத் தொகை அல்லது தகைமை பெறு தொகை பெற்றுக்கொள்ள்ப்படும். அத் தொகையினால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் மெத்த வாக்காளர் தொகையை வகுப்பதன் ஊடாக மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்கீடு செய்யப்ப டும்.

வருடாந்தம் வாக்காளர் தொகை கணிப்பீடு செய்யப்படுவதால், ஒவ்வொரு மாவட்டத்திற்கு முரிய ஆசன ஒதுக்கீடு வருடாந்தம் தேர்தல் ஆணையாளரால் கணிப்பிடப்படுகிறது.

இவ்வெண்ணிக்கையோடு மாகாணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 04 ஆசனங்களில் மாவட்டத்துக்குரிய ஆசனத்தையும் சேர்க்கும் போது கிடைக்கப்பெறுகின்ற ஆசனங்களின் எண்ணிக்கையே அம்மாவட்டத்துக்குரிய மொத்த ஆசனத் தொகையாகும். மீதமாக உள்ள 29 உறுப்பினர்கள் தேசியப்பட்டியல் ஊடாக நிரப்பீடு செய்யப்ப டுவர்.

பாராளுமன்றத் தேர்தல் 1994

| A- மாவட்டரீதியில் ஆசனங்கள்<br>B-தேசியப் பட்டியல் ஆசனங்கள்<br>C-பெற்ற மொத்த ஆசனங்கள் | பெற்ற மொத்த வாக்குகள் | % | பெற்ற ஆசனங்கள் A | B | C |
|---|---|---|---|---|---|
| மக்கள் கூட்டணி (PA) | 3,887,823 | 48.94% | 91 | 14 | 105 |
| ஐக்கிய தேசிய கட்சி | 3,498,370 | 44.04% | 81 | 13 | 94 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) | 10,744 | 0.14% | 9 | 0 | 9 |
| இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் | 143,307 | 1.80% | 6 | 1 | 7 |
| தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி | 132,461 | 1.67% | 4 | 1 | 5 |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி(DPLF) | 38,028 | 0.48% | 3 | 0 | 3 |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 90,078 | 1.13% | 1 | 0 | 1 |
| மலையக மக்கள் முன்னணி | 27,374 | 0.34% | 1 | 0 | 1 |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 68,538 | 0.86% | 0 | 0 | 0 |
| சுயேட்சை | 33,809 | 0.43% | 0 | 0 | 0 |
| ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி | 9,411 | 0.12% | 0 | 0 | 0 |
| நவ சமசமாஜக் கட்சி | 2,094 | 0.03% | 0 | 0 | 0 |
| மக்கள் சுதந்திர முன்னணி | 813 | 0.01% | 0 | 0 | 0 |
| ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் | 589 | 0.01% | 0 | 0 | 0 |
| சிங்களயே மகாசம்மதா பூமிபுத்ரா பசஷயா | 267 | 0.00% | 0 | 0 | 0 |
| மொத்தம் | 7,943,706 | | 196 | 29 | 225 |

(தொடரும்)

# அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கும் செயற்றிட்டத்தை உடன் முன்னெடுக்கக் கோரிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் 18 வயது பூர்த்தி அடைந்துள்ள அனைவருக்கும் தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துமாறு, நான்கு அமைப்புகளால் ஒன்றிணைந்த தேர்தல்கள் தொடர்பான பரிசீலனைகளை செய்துவரும் சுயாதீன முதன்மை செயற்பாட்டு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

தங்களால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின்போது 67 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 18 வயது பூர்த்தியாகியுள்ள 52 ஆயிரத்து 734 பேருக்கு இதுவரையில் தேசிய அடையாள அட்டை கிடைக்கவில்லை என்று தெரிய வந்துள்ளதாகவும் மேலும் 264 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை என்றும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கமைய இளைஞர்களுக்கான வலையமைப்பு, ஜனநாயகத்தை நோக்கிய இளம் சட்டத்தரணிகளின் சங்கம், இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கத்தினர் மற்றும் ஜனநாயகத்தை நோக்கிய இளைஞர் சங்கத்தினரே ஒன்றிணைந்து இந்த சுயாதீன அமைப்பாகச் செயற்பட்டு வருவதுடன், இவர்கள் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச நிர்வாகம் மற்றும் ஆட்பதிவுகள் திணைக்களத்திற்கும் கடித மொன்றை அனுப்பியுள்ளனர்.

இந்தக் கடிதத்திலே கூறப்பட்டுள்ளதாவது,

தேசிய அடையாள அட்டை என்பது பிரஜை ஒருவரின் அடையாளமாகும். இது வாக்களிப்பு உரிமையின் பிரதான அம்சமாகும். இந்நிலையில் தேசிய அடையாள அட்டை இன்றி இருப்பது சிக்கலுக்குரிய விடயமாகும்.

இவ்வாறு தேசிய அடையாள அட்டை இன்றி இருப்பவர்களின் விபரம் தொடர்பில் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு தகவல்கள் கிடைக்கப் பெறுவது இல்லை என்று சில செயலகங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் அடையாள அட்டை தொடர்பில் முறையான வேலைத்திட்டமொன்றை பிரதேச செயலகங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

தகவலறியும் சட்டத்திற்கமைய நாங்கள் இந்தத் தகவல்களை அறிந்து கொண்டுள்ளதுடன் இது தொடர்பில் 67 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து எமக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 52 ஆயிரத்து 734 பேர் இவ்வாறு அடையாள அட்டை கிடைக்கப் பெறாமல் இருப்பதாக தெரிய வந்துள்ளது. (ஐ-4)

# இடுகம கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய மீதி ஆயிரத்து 374 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட் -19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 374 மில்லியனாக அதிகரித்துள்ளது.



மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் ஒரு கோடியே 41 இலட்சத்து 33 ஆயிரத்து 164 ரூபாவையும் வரையறுக்கப்பட்ட மத்திய மாகாண கல்விச் சேவைகள் சேமநிதி, கடன் கொடுக்கல்-வாங்கல் தொடர்பான கூட்டுறவு சங்கம் 2 இலட்சம் ரூபாவையும் நோர்வூட் பிரதேச சபை தலைவர் கே.கே.ரவி 50 ஆயிரம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

அவற்றுக்கான காசோலைகள் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகேவினால் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டன.

ஊவா மாகாண ஆளுநர் உள்ளிட்ட மாகாண அரசாங்க அதிகாரிகள் அன்பளிப்புச் செய்த ஒரு கோடியே 16 இலட்சத்து 12 ஆயிரத்து 27 ரூபாவுக்கான காசோலை ஆளுநர் ராஜா கொல்லுரேவினாலும் தென் மாகாண அரசாங்க அதிகாரிகள் அன்பளிப்புச் செய்த 2 கோடியே 2 இலட்சத்து 73 ஆயிரத்து 541 ரூபாவுக்கான காசோலை ஆளுநர் விலீ கமகேவினாலும் வட மாகாண அரசாங்க அதிகாரிகள் அன்பளிப்பு செய்த 3 இலட்சம் ரூபாவுக்கான காசோலை ஆளுநர் பீ.எஸ்.எம்.சாள்ஸினாலும் கிழக்கு மாகாண அரசாங்க அதிகாரிகள் அன்பளிப்புச் செய்த 4 கோடி ரூபாவுக்கான காசோலை ஆளுநர் அநுராதா யஹம்பத் மற்றும் தலைமை செயலாளர் பீ.வனிகசிங்கவினாலும் மேல் மாகாண அரசாங்க அதிகாரிகள் அன்பளிப்புச் செய்த 2 கோடி ரூபாவுக்கான காசோலை ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் டபிள்யு.டீ.எம்.ஜே ரொஷான் குணதிலகவினாலும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

Dial Textile Industries (Pvt) Ltd நிறுவனம் 30 இலட்சம் ரூபாவையும் நீல் உமகிலிய ஒரு கோடி ரூபாவையும் Lion Vision for Sight Hospital Trust நிறுவனம் 10 கோடி ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். இவற்றுக்கான காசோலைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

Sri Lanka – Australia – NewZealand Business Council (The Ceylon Chamber of Commerce) நிறுவனம் 5 இலட்சம் ரூபாவையும் சட்டத்தரணி டீ.லக்சிறி மெண்டிஸ் 5 இலட்சம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். தற்போது இடுகம கொவிட்-19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 374 மில்லியனாகும். (ஐ-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனம் ஒரு குரங்கு

ஒரு சந்நியாசி இருந்தார். அவரிடம் போய் ஒருத்தர் "சுவாமி உங்களுக்கு என்ன வேணுமோ கேளுங்கள்... உங்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்றார்.

சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார். "எதையும் செய்யத் தயாராக இருக்கிறாயா?" என்றார். ஆமாம் என்றார் அவர். "வாக்குக் கொடுத்ததற்குப் பிறகு தயங்கக் கூடாது" என்றார். தயங்க மாட்டேன் என்றார்.

"அப்படியென்றால் உன் குடும்பம், சொத்து, வீடு, வாசல் எல்லாவற்றையும் உதறிவிட்டு நாளைக்கு என்கூடவே வந்து விடு" என்றார். அந்த ஆள் திகைத்துப் போய்விட்டார். "சுவாமி அந்த அளவுக்கு என் மனம் இன்னும் பக்குவம் அடையவில்லை. நான் இப்போது நடத்திக்கொண்டிருக்கிற வியாபாரத்தை ஏற்கிற அளவுக்கு என் மகனும் இன்னும் பக்குவம் அடையவில்லை. அப்படி இருக்கிற போது" என்று இழுத்தார்.

இப்ப அந்த சந்நியாசி ஒரு கதை சொல்கிறார். அந்தக் கதை இதுதான்.

ஒரு குரங்கு ஒரு சபையிலே ஓரமாக உட்கார்ந்து ஒரு உபந்நியாசத்தைக் கேட்டது. உடனே அதுக்குத் தன்னுடைய மனசு பக்குவம் அடைந்திட்டதாகத் தோன்றியது. தோட்டத்துக்குப் போய் ஒரு பாறை மேலே உட்கார்ந்து ஒரு நாள் பூராக ஜெபம் செய்ய வேண்டும் என்று தீர்மானம் எடுத்தது. அதேமாதிரிப் போய் உட்கார்ந்து ஜெபம் செய்ய ஆரம்பித்து விட்டது. கொஞ்ச நேரத்திலே அது மனதுக்குள்ளே ஒரு சந்தேகம் வந்தது.

ஒருவேளை நான் இப்படியே பட்டினி கிடந்திட்டேன் என்றால் நான் எனக்கு வேண்டிய இரையைத் தேட வெளியே போய் மரத்துக்கு மரம் தாவ முடியாமல் போய் விடுமோ என்கிற சந்தேகம்.

அதனாலே தொடர்ந்து ஜெபம் செய்ய முடியவில்லை. உடனே என்ன செய்தது. ஓடிப்போய் ஒரு மரத்திலே இருந்த பழங்களையெல்லாம் பறித்துக் கொண்டு வந்தது. ஒரு மூலையிலே அதையெல்லாம் தயாராக வைத்துக்கொண்டு அதுக்குப் பின் ஜெபம் செய்ய ஆரம்பித்தது.

கொஞ்ச நேரம் ஆகிவிட்டது. மறுபடியும் மனசிலே ஒரு சந்தேகம். "ஒருவேளை பட்டினியாலே என் உடம்பு ரொம்பவும் பலவீனம் அடைந்து மூலையிலே இருக்கிற அந்தப் பழங்களை எழுந்து நடந்து போய் எடுத்துச் சாப்பிட முடியாமல் போய்விட்டது என்றால் என்ன செய்கிறது. அப்படி ஆகிவிட்டது என்றால் அந்தப் பழங்களை பார்த்தே ஏங்கிப் போய் இறந்து போவது போல ஆகிவிடுமோ" என்கிற நினைப்பு வந்தது.

பயமாகப் போய்விட்டது. அழுகை வந்துவிட்டது. உடனே என்ன செய்தது...எழுந்து ஓடிப்போய் அந்த பழங்களையெல்லாம் அள்ளிக்கொண்டு வந்து காலடியிலே வைத்துவிட்டது. மறுபடியும் ஜெபம் செய்ய ஆரம்பித்தது.

கொஞ்சநேரம் ஆகிவிட்டது. மறுபடியும் மனதுக்குள்ளே ஒரு சந்தேகம். "ஒருநாள் பட்டினிக்கு பின்பு ஒருவேளை நம்மாலே கையை நீட்டி பழங்களை எடுக்கிற அளவுக்கு பலம் இல்லாமல் போய்விட்டது" என்றால் என்ன செய்கிறது.

உடனே தன்னை அறியாமல் ஒரு பழத்தை வாயிலே போட்டுக் கொண்டது. இப்ப வாய்க்குள்ளே பழம் இருந்ததனாலே வாயை அசைத்து ஜெபம் செய்ய முடியவில்லை.

மனசும் அந்தப் பழத்தின் ருசியிலே ஈடுபட ஆரம்பித்து விட்டது. அந்தப் பழத்தை சாப்பிட்டு முடித்ததும் அந்தக் குரங்கு நினைத்துப் பார்த்தது. "எப்படியும் நாளைக்கு இந்தப் பழங்களை நான்தானே சாப்பிடப்போகிறேன். அதை இப்பவே சாப்பிட்டு விட்டால் என்ன? பட்டினியோடுதான் ஜெபம் செய்ய வேண்டும் என்று சட்டமா என்ன?" இப்படி நினைத்துக்கொண்டே அந்தக் குரங்கு எல்லாப் பழங்களையும் எடுத்து சாப்பிட ஆரம்பித்து விட்டது. வயிறு நிறைந்தது. ஜெபம் செய்கிற எண்ணம் மறைந்து போய்விட்டது அங்கேயே படுத்துத் தூங்க ஆரம்பித்து விட்டது. இதுதான் அந்த சந்நியாசி சொன்ன கதை.

அதனாலே மனதை கட்டுப்படுத்துவது அவ்வளவு சுலபமான விடயமில்லை. அது ரொம்ப கஷ்டம். மனசு ஒரு குரங்கு மாதிரியென்று சொல்லுவது எதுக்கென்றால் இது இரண்டையுமே கட்டுப்படுத்துவது சிரமமான காரியம்.

ஒருத்தர் அப்படித்தான் ரொம்பப் பிரியமாக ஒரு குரங்கை வளர்த்தார். அதை முறைத்துப் பார்ப்பார். அந்தப் பார்வையைப் பார்த்தே அது அடங்கிப் போய்விடும். அப்படியொரு பயிற்சி.

ஒருநாள் அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். நடுக்கூடத்திலே எதிரும் புதிருமாக அவர்கள் இரண்டு பேரும் உட்கார்ந்திருந்தார்கள். இவர் அந்தக் குரங்கையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் குரங்கு இவரையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தது. இரண்டு பேருக்கும் நடுவிலே ஒரு வாழைப்பழம். அந்த வாழைப்பழத்தை எடுக்கவிடாமல் பார்வையாலேயே குரங்கை கட்டுப்படுத்திக்கொண்டிருந்தார்.

நான் அவர் காதோரமாகப் போய் "என்னங்க பழத்தை எடுக்க முடியாத அளவுக்கு அந்தக் குரங்கை பார்வையாலேயே கட்டுப்படுத்துகிறீர்கள் போல இருக்கே" என்றேன்.

அவர் பார்வையைத் திருப்பாமல் பதில் சொன்னார்... "அப்படியில்லை இப்ப அந்தக் குரங்குதான் என்னை கட்டுப்படுத்தி வைத்திருக்கு. பழத்தைத் தொட்டேன் என்றால் பாய்ந்து என் மேலே விழுந்து குதறிவிடும். எப்படி அந்தப் பழத்தை எடுக்கிறது என்றுதான் யோசனை செய்து கொண்டிருக்கிறேன்" என்றார் அவர்.

இப்போது செய்வதைவிட, இன்னும் சிறப்பாக பணி யாற்ற திறமையும், வாய்ப்பும் இருந்தும் அப்படி செய் யாமல் இருப்பவனும் சோம்பேறியே. *- சோக்ரட்டீஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வானத்து வெள்ளியை எண்ணுவது காவலுக்கு உதவுமோ

குதிரைக் காவலன் ஒருவன் விழித்திருப் பதற்காக வானத்தில் உள்ள நட்சத்திரங்களை யெல்லாம் எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டிருந்தான்.

குதிரைகளைப் பாதுகாப்பதற்காக அவன் அவ்வாறு செய்கிறான். அந்நேரத்தில் திருடர் கள் குதிரைகளைக் கவர்ந்து சென்று விடு கின்றனர்.

விடிபொழுதில் வானத்து வெள்ளிகள் மறை வுற்றபோது அந்தக் காவலாளி குதிரைகளைப் பார்க்கிறான். எவையும் அங்கில்லை.

என்ன செய்வது குதிரைக் காவலன் உறங் காமல் விழித்திருப்பதற்காகக் கையாண்ட யுக்தி அவனின் பணியை பயனற்றதாக்கி விட்டது.

அந்தக் குதிரைக் காவலாளிக்கு ஏற்பட்ட அவலம் போல பல்வேறு இடங்களில் நடந் திருக்கிறது.

இன்றைய யதார்த்தத்தில் எம் தமிழினத் தின் எதிர்காலத்தை எட்டிப் பார்க்கும்போது அதேநிலைமை வந்துவிடுமோ என்று எண் ணத் தோன்றுகிறது.

ஒருகாலத்தில் தமிழினம் தன் பொருளா தாரத்தைக் கட்டிக் காப்பதில் சுயமாகச் செயற் பட்டிருந்தது. ஒவ்வொரு ஊரிலும் நடந்த நெற் செய்கை வீட்டில் பஞ்சம் இல்லை என்பதை உறுதி செய்தது.

ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு பைக்கற் பால் மா வாங்கத் தேவையில்லை என்றது. வீட்டில் கொட்டிக் கிடக்கும் மிச்ச சொச்சத்தை கொத் தித் தின்பதற்கு ஐந்தாறு கோழி நின்றதால் ஊர் முட்டை என்ற பெருமையோடு பிள்ளை கள் உண்பதற்கு உதவிற்று.

பன்னவேலை, தையல், ஊர்ப் பெண்கள் ஒன்றுகூடி பிடிக்கின்ற சீட்டு, வீட்டுத் தலைவன் உழைப்பதில் பேணிக்குள் எடுத்து வைத்த மிச்சம் என எங்கும் எதிலும் வருமானம், நுகர்வு, சேமிப்பு என்பதாய் எங்கள் சுய பொரு ளாதாரம் கட்டுக் கோப்புடன் இருந்தது.

இதற்கு மேலாக கங்குமட்டை, பன்னாடை சமையலுக்கு விறகாக, ஊர்ப் பெண்கள் குட மெடுத்துக் கூட்டமாய்ச் சென்று கோயில் கிணற்றில் குடி தண்ணீர் அள்ளி வந்து சிக் கனம் காத்த செயல் எல்லாம் மலையேறிப் போய்; இன்று வீட்டு வாசல் தேடி வருகின்ற குடிநீரும் காசை எடு என்கிறது. அந்தோ! வெட்டி வைத்த வீட்டுக் கிணறு அள்ளி அருந்துவார் இன்றி கண்ணீர் விடுகிறது.

தவிர, விறகுக்கு விடை கொடுத்த எரிவாயு பணத்தையும் சேர்த்தே எரிக்கிறது.

ஆடு வளர்ப்பில்லை. வீட்டுக்கொரு பசு வில்லை, ஊர்க்கோழி என்ற இனமே இல்லை. **எப்படி எம் இனம் தப்பிப் பிழைப்பது. அந்தோ! குதிரைக் காவலாளியின் அதே கதி நமக்கு வேண்டாமென்றால், சுயபொருளாதாரத்தை நோக்கிப் பயணிப்பதுதான் ஒரே வழியாகும்.**

## தனிப்பட்ட அரசியல் இருப்பை பாதுகாக்கவே அரசு முயற்சிக்கின்றது-அநுர குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டு மக்களின் உயிர் களை பலி கொடுத்தேனும், மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆளும் தரப்பினர் தற்போது முயற்சித்து வருகிறார்கள் என ஜே.வி.பியின் தலை வரான அநுரகுமார திஸா நாயக்க குற்றம்சாட்டி னார்.

கொழும்பில் நேற்று முனதினம் ஊடகங்களு க்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

"இன்று எமது நாட்டில் கல்விச் சேவை முற்றாக செயலிழந்துள்ளது. அரச - தனியார் கல்வித்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், மாணவர் களின் எதிர்காலம் கேள் விக் குறியாகியுள்ளது. பரீ ட்சைகள் தொடர்பான ஒரு தெளிவின்மை ஏற்பட்டுள் ளது.

எனவே, அரசாங்கம் இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கி றோம்.

அரசாங்கத்தைப் பொறு த்தவரை மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாக எந்தவொரு ஸ்திரமான நிலைப்பாட்டுக்கும் வரவி ல்லை என்றே தெரிகிறது.

மாறாக, இந்தத் தரப்பி னர் பொதுத் தேர்தலையே இலக்காகக் கொண்டு செய ற்பட்டு வருகிறார்கள். இன்று நாட்டில் கொரோனா அச்சு றுத்தல் ஏறபட்டுள்ளது.

இந்த நிலையில்கூட அர சாங்கம் தேர்தலை நடத் துவதற்குத் தீர்மானித்துள் ளது.

அதாவது, நாட்டுமக்க ளின் உயிர்களை பலி கொடுத்தேனும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை யைப் பெற்று விட வேண் டும் என்பதுதான் ஜனா திபதி உள்ளிட்ட அரச தரப் பினரின் நோக்காக இரு க்கிறது.

இவர்களின் தற்போ தைய செயற்பாடுகளின் ஊடாக இது நன்றாகத் தெரிகிறது.

மக்களின் இறையாண் மையைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, தனிப்பட்ட அரசியல் இருப்பைப் பாது காக்கவே இவர்கள் முறப டுகிறார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## குணமடைந்தோர் 1122

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 65 பேர் குணமடைந்து வைத் தியசாலைகளிலி ருந்து வெளியேறியுள்ள னர்.இதற்கமைய கொரோ னாத் தொற்றிலிருந்து பூர ணமாக குணமடைந்தவர் களின் எண்ணிக்கை ஆயி ரத்து 122 பேராக அதிகரித் துள்ளது. மேலும் தொற்றுக் குள்ளான 725 பேர் வைத் தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள் ளது.

இதேவேளை நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளா னவர்களின் எண்ணி க்கை ஆயிரத்து 859 ஆக அதி கரி த்துள்ளது. அத்தோடு இந்த தொற்று காரணமாக இலங் கையில் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ-4)

## விருப்பு இலக்கப்பட்டியலில் ஆறுமுகனின் பெயர் மீள்திருத்த வர்த்தமானி விரைவில்

(கொழும்பு)

தேர்தல்கள் திணைக் களம் நேற்று முன்தினம் விடுத்த வர்த்தமானி அறி வித்தலில் நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் ஆறு முகன் தொண்டமானின் பெயரே பதிவாகியுள்ளது.

விருப்பு இலக்கம் 3 இல் ஆறுமுகன் தொண்டமா னின் பெயர் உள்ளவாறே வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் குறி த்த வழக்கொன்று நீதிமன் றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த கால்கட்ட த்தில் இந்த விருப்பு இலக் கப் பட்டியல் தயாரிக்கப்பட்ட காரணத்தினாலும் முதல் கட்டப்பெயர்கள் ஆரம்பத் தல் அச்சிடப்பட்ட காரணத் தினாலும் அவ்வேளையில ஆறுமுகன் தொண்டமான் உயிருடன் இருந்ததாலும் நுவரெலியா மாவட்ட விரு ப்பு இலக்க பட்டியலில் ஆறு முகன் தொண்டமானின் பெயர்பதிவாகியுள்ளதாகவும் காலஞ்சென்ற ஆறுமுகன் தொண்டமானின் வெற்றிட த்திற்கு நியமிக்கப்பட்டு ள்ள அவரது புதல்வர் ஜீவன் தொணடமான் குறித்து விசேட வர்த்தமானி அறி வித்தல் ஒன்று விடப்படும் என தேர்தல்கள் திணைக் களம் அறிவித்துள்ளது. (ஐ-4)

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

ஆறு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் இடமாற்றங் களிற்கு ஒப்புதல் அளிக் கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ்ஆணை க்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணக் கப்பாட்டுடன் இந்த இடமாற் றங்கள் வழங்கப்பட்டுள் ளன.

டி.ஐ.ஜி. வருண ஜெய சுந்தர சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரி, டி.ஐ.ஜி பி.ஆர்.எஸ். ஆர்.நாகஹ முல்ல- கொழும்பு போக்கு வரத்துக் கட்டுப்பாடு மற் றும் வீதிப் பாதுகாப்பு, மேல திகமாக வடக்கு மாகாணம்.

டி.ஐ.ஜி எம்.என்.சிசிர குமார- மனிதவள மேலா ண்மை மற்றும் சர்வதேச உற வுகள், ஆட்சேர்ப்பு.

டி.ஐ.ஜி கருணநாயக்க - தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனங்கள், டி.ஐ.ஜி குணதிலக -திருகோண மலை, டி.ஐ.ஜி எச்.என். கே.டி.விஜயஸ்ரீ-சேவை ஆகிய இடமாற்றங்களே இவ்வாறு வழங்கப்பட் டன. (ஐ-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**ஒரே நாளில் செல்வந்தனாக வேண்டுமென்று விரும்புகிறவன் ஒரே ஆண்டில் வறுமையின் பிடியில் சிக்குவான்.** *- டாவின்சி*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு. வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணியி லிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதே சத்தில் ஒதியமலை, பெரிய புலம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்** தில் சாளம்பைக்குளம் ஒரு பகுதி, கூமாங்குளம் கிரா மம், பகல அளுத்வத்த கிரா மம், தவசிகுளம் கிராமம், புளிதறித்தபுளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத் தில் வட்டுபித்தன்மடு, புதுக்காமம், ஓலைத்தொடு வாய் ஆகிய பிரதேசங்களி லும் மின்சாரம் தடைப்ப டும்.**

## சத்திய தரிசனம்

### கடமையில் கண்ணாயிருங்கள்



❖ காற்றை எந்த இடத்திலும் கட்டுப்படுத்தி வைக்க முடியாது. அதுபோல ஆன்மீக காற்றும் உலகெங்கும் வீசிக் கொண் டிருக்கிறது. இதை யாராலும் தடுத்த நிறுத்த முடியாது.

❖ கடவுள் நமக்குரியவர் என்று நினைப்பதை விட நாம் கடவுளுக்குரியவர் என்று சிந்திப்பது உயர்வானது.

❖ பஜனையில் பாடிக் கொண்டிருப்பது மட்டுமே பக் தியாகாது. உள்ளத்திலும், நடத்தையிலும் உண்மை யும், தூய்மையும் வெளிப்படுவதே பக்தியின் இலக் கணம்.


❖ வெற்றியோ, தோல்வியோ நமக்கு கிடைப்பது கிடைக்கட்டும் என பொறுப்பை கடவுளிடம் ஒப்படைத்து விட்டு கடமையில் முழுமையாக ஈடுபடுங்கள்.


❖ கோபம், பேராசை, காமம், பொறாமை போன்ற மலைப்பாம்புகளின் பிடியில் மனிதன் சிக்கித் தவிக் கிறான்.

❖ **கடவுளைச் சரணடைந்து விட்டால், அவர ருளை எளிதாகப் பெறலாம்.**

# அஸாமில் பற்றியெரியும் எண்ணெய் வயல்

## ◆1600 குடும்பங்கள் வெளியேற்றம் ◆6 பேர் காயம்
## ◆தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள்





(அஸாம்)
அஸாம் மாநிலம் தின்சுகியா மாவட்டத்தில் உள்ள எண்ணெய் வயலில் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, சுற்று வட்டாரங்களில் வசித்த 1600 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

இந்தியாவின் அஸாம் மாநிலம் தின்சுகியா மாவட்டம் பக்ஜான் பகுதியில் ஒயில் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான எண்ணெய் வயலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. கடந்த 14 நாட்களாக எரிவாயு கசிவு ஏற்பட்டு வந்துள்ளது.

இதனையடுத்து சிங்கப்பூரைச் சேர்ந்த எண்ணெய் வயல் நிபுணர்கள் நேற்று முன்தினம் இந்த எண்ணெய் வயலை பார்வையிட்டு எரிவாயு கசிவை சரி செய்யும் பணியில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதனால் எண்ணெய் வயலில் இருந்த அனைவரும் வெளியேறினர்.

தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதால் அப்பகுதியை சுற்றி வசிக்கும் சுமார் 1600 குடும்பங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். தீ விபத்தில் ஏராளமான தாவரங்கள் மற்றும் பல்வேறு வீடுகள் கருகின. அருகில் உள்ள கிராமங்களுக்கும் தீ பரவிய நிலையில், இதுவரை 6 பேர் காயமடைந்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதில் தீயணைப்பு வீரர் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தேசிய பேரிடர் மீட்பு படையினர் மற்றும் மாநில அரசின் உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டு வருகின்றனர்.

விரைவில் நிலைமை கட்டுக்குள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (2-5)

# பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல்



(டில்லி)
ஜம்மு-காஷ்மீரின் சோபியான் மாவட்டத்தில் நேற்று அதிகாலையில் நடந்த என்கவுண்டரில் 3 பயங்கரவாதிகளை இந்தியப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

ஜம்மு-காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் பதுங்கியிருந்து நாசவேலைக்கு சதித்திட்டம் தீட்டி வரும் பயங்கரவாதிகளை அடையாளம் கண்டறிந்து அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், சோபியான் மாவட்டம் சுகூ பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினர் நேற்று அதிகாலை அப்பகுதிக்குச் சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள், பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். பாதுகாப்பு படையினரும் பதிலடி கொடுத்தனர்.

நீண்ட நேரம் நடந்த இந்த துப்பாக்கிச் சண்டையில் 3 பயங்கரவாதிகளைப்பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர். தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் வேட்டை நடைபெறுகிறது.

கடந்த 15 நாட்களில் மட்டும் ஜம்மு-காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் 20 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகளை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# ஆசியாவின் நோபல் பரிசான ரமோன் மக்சேசே விருது ரத்து



(பாங்கொக்)
கொரோனா வைரஸ் பரவி வருவதன் காரணமாக ஆசியாவின் நோபல் பரிசு என்ற சிறப்புக்குரிய "ரமோன் மக்சேசே" விருது இந்த ஆண்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

விமான விபத்தில் மறைந்த பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ரமோன் மக்சேசே நினைவாக ஆண்டுதோறும் அரசுப்பணி, பொதுச் சேவை, சமூக தலைமை, இலக்கியம், அமைதி, வளரும் தலைமை என்ற 6 பிரிவுகளில் ஆசியாவில் சிறந்து விளங்கும் நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் ரமோன் மக்சேசே விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டு வந்தது.

1958 ஆம் ஆண்டு முதல் மணிலாவை தலைமையிடமாகக் கொண்டுள்ள ரமோன் மக்சேசே விருது அறக்கட்டளை சார்பில் வழங்கப்படுகிற இந்த விருது ஆசியாவின் நோபல் பரிசாக கருதப்படுகிறது.

இதுவரை 330 பேருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## டொனால்ட் ட்ரம்பின்
# ஜனாதிபதிக் கனவு கலையும் நிலையில்




(வோஷிங்டன்)
மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக கனவு கண்டுகொண்டிருந்த டொனால்ட் ட்ரம்பிற்கான ஆதரவுகள் கணிசமான அளவு சரிந்துள்ளதாக அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து ஜனாதிபதி ட்ரம்ப் பெரும் கலக்கத்தில் இருப்பதாக வெள்ளை மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனாவின் கோரத் தாண்டவத்தை சரியான முறையில் கையாளாதது, இனப் பாகுபாட்டுக்கு எதிராகக் குரல் கொடுக்காமல் இருப்பது போன்ற சம்பவங்களால் டொனால்ட் ட்ரம்ப் இந்த பின்னடைவைச் சந்தித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-5)

# சுலைமானி படுகொலை விவகாரம்; தகவல் வழங்கியவருக்கு மரண தண்டனை

## ஈரான் அறிவிப்பு



(டெஹ்ரான்)
சுலைமானி கொலைச் சம்பவத்தில் அமெரிக்காவின் மொசாட்டுக்கு உளவாளியாக செயற்பட்டவருக்கு ஈரான் மரண தண்டனையை அறிவித்துள்ளது.

ஈரான் நாட்டின் குர்து படை கொமாண்டர் குவாசிம் சுலைமானி கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி டெஹ்ரான் விமான நிலையத்தில் ட்ரோன் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டார்.

அமெரிக்க அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் அவர் பலியானது ஈரானுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையடுத்து, சுலைமானி கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா தகுந்த விலை கொடுக்க நேரிடும் என்று ஈரான் எச்சரித்தது.

இதற்கு பழி தீர்க்கும் விதமாக கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஈராக்கில் உள்ள அமெரிக்க விமானப்படை தளங்கள் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. ஆனாலும், பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை.

இந்நிலையில் குவாசிம் சுலைமானி குறித்து அமெரிக்காவின் சி.ஐ.ஏ. மற்றும் இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாட்டுக்கு முக்கிய தகவல்களை வழங்கியதற்காக மக்முத் மவுசாவி மஜ்த் என்பவரை ஈரான் பொலிஸ் கைது செய்தது.

விசாரணையில் சுலைமானி குறித்த தகவல்களை உளவு அமைப்புகளுக்கு அளித்தது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து மக்மூத் மவுசாவி மஜ்த்தை தூக்கிலிட முடிவு செய்திருப்பதாக ஈரான் நாட்டு நீதித்துறை செய்தித் தொடர்பாளர் கோலாம்ஹூசைன் இஸ்மாயில் தெரிவித்துள்ளார். (2-5)

### குறைந்த வருமானம் பெறுவோரின்

# வீட்டு நிர்மாணப் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்

### நிர்மாணத்துறையினருக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

மத்திய மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீட்டு நிர்மாணப் பணியில் கவனம் செலுத்துமாறு அரச அபிவிருத்தி. நிர்மாணத்துறை கூட்டுத்தாபனத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச அபிவிருத்தி. நிர்மாணத்துறை கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்காக நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டது.

பாரம்பரிய முறைமைகளில் இருந்து விலகி அரச நிறுவனங்களை இலாபமீட்டும் நிலைக்கு மாற்றுவதற்கு தேவையான திட்டங்களை விரைவாக தயாரிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த 5 வருட இறுதியில் நிறுவனத்தை பொறுப்பேற்ற போது இருந்த நிலை மற்றும் தற்போதைய நிலை பற்றி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்ட ஜனாதிபதி அடுத்த வருடத்தில் அடையவேண்டிய இலக்குகளை இவ்வருடத்திலேயே திட்டமிட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அரச நிறுவனங்கள் தனியார் துறையின் புதிய நிர்மாணத்துறை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி தனியார் துறையுடன் போட்டியிடக் கூடிய வகையில் தரத்தையும் நியமங்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அரச நிறுவனங்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய பணம் உரிய முறையில் கிடைக்காத காரணத்தினால் எழுந்துள்ள பிரச்சினைகளும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.

அது பற்றி கண்டறிந்து பணத்தை அறவிடுவதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (ம-3)


அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 946
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.06.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 61,466,260/-
வெற்றி இலக்கங்கள் 10 13 27 73 F

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3323 திகதி: 2020.06.10
ஊதா புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 22 46 62 T
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 39,740,685/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 10.06.2020 வெற்றி வாரம் 2827 வர்ணம் பச்சை
ராசி துலாம் வெற்றி இலக்கங்கள் 09 10 47 49
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,103,474
ரூ.500 பரிசுக்குரிய 2 7 9 6
ரூ.100 பரிசுக்குரிய 8 0 1
பபல் சான்ஸ் விசேட இல.
2020.06.11 ம் திகதி வியாழக் கிழமை சுபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 338
08.04.2020 நீலம்
10.06.2020
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 32 43 64 விதி எண் 3
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 53,912,552
தொ.பே. : 0112 333 546/47
Web : www.dlb.lk


## 32 பவுண்...

பனைச் சந்திக்கு அண்மையாகவுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் உள்நுழைந்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்தவர்களின் கழுத்தில் வாளினை வைத்து அச்சுறுத்தி 32 பவுண் நகை மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துக்கொண்டு தப்பித்துள்ளனர்.

இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3.78)

## யாழ்.இந்திய...

கொரோனா தொற்றுக்குள்ளான இந்திய பிரஜையை கொழும்புக்கு அழைத்து சென்ற அதிகாரி மற்றும் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இந்திய பிரஜையின் மரண சான்றிதழ் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவருமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு பீ.சீ.ஆர். பரிசோதனை நடத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## அனைத்து பூங்...

சுற்றாடல் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைவாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக சுற்றுலாத் தலங்கள் திறக்கப்பட உள்ளன.

எனினும் சுற்றுலாப் பயணிகள் கொரோனா தொற்றுக்கு எதிரான சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகவே அனுமதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 100 மாணவர்...

களை ஜூன் 15 முதல் நடத்த தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அரச தகவல் திணைக்களத்தால் நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தனியார் வகுப்புக்களை ஆரம்பிக்கும் அனுமதி ஜூன் 15 முதல் அல்ல என்றும் ஜூன் 29ஆம் திகதி தொடக்கமாகும் என்றும் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. (ம-3)

## சுகாதார விதி...

பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலார்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் முகமாக இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் கூறியதாவது,

பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதார விதிமுறைகள் தொடர்பில் சுகாதார பிரிவு உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்த விதி முறைகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திற்கும் சுகாதார பிரிவு அறிவித்துள்ளது. அதற்கமைய அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார பிரிவின் ஆலோசனைக்கமைய தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மற்றும் கூட்டங்கள் இடம்பெறுகின்றதா என்பது தொடர்பில் பொலிஸார் அவதானமாக இருப்பதுடன் சுகாதார பிரிவினரின் விதிமுறைகளை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொலிஸார் தயாராக இருக்கின்றனர் என்றார். (ம-3)

## யாழ்ப்பாணம்...

இத் தாக்குதல் சம்பவத்தில் நாக விகாரையின் முகப்பில் உள்ள புத்தர் சிலையின் கண்ணாடிகள் உடைந்துள்ளதுடன் புத்தர் சிலைக்கும் சிறிய சேதம் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தையடுத்து ஏராளமான இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் விகாரைக்கு இராணுவ பாதுகாப்பும் வழங்கப்பட்டது. இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சீ.சீ.ரி.வி காணொளிகள் பெறப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போது இந்த தாக்குதலை மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே மேற்கொண்டதாக தெரியவந்தது.

இத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தில் நேற்றிரவு இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ம-3,8)

## பரிசோதனை...

இணுவிலில் தங்கியிருந்த இந்திய புடவை வியாபாரிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள 15 பேருக்கான பரிசோதனைகள் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் ஒருவருக்கும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் அவருடன் தொடர்பை பேணியவர்களில் நேற்று முன்தினம் 13 பேருக்கான மாதிரிகள் எடுக்கப்பட்டு கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று பரிசோதிக்கப்பட்டது. அவர்களிலும் ஒருவருக்கும் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டிருக்கின்றது. (ம-3,9)

## ஒருவருக்கு...

கலைக் கழக மருத்துவபீடத்தில் 119 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், முல்லைத்தீவு இலங்கை விமானப்படை தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கியிருந்த முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவு இலங்கை விமானப்படை தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்ட 98 பேர், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 15 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 5 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3,18)

## தேர்தல் ஓகஸ்...

பொதுத் தேர்தலுக்கான புதிய திகதியை அறிவிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவின் 3 உறுப்பினர்களும் நேற்று புதன்கிழமை கூடியிருந்தனர்.

2020 பொதுத் தேர்தலை ஓகஸ்ட் 5ஆம் திகதி நடத்த மூன்று உறுப்பினர்களும் ஏகமனதாகத் தீர்மானித்ததாக மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என்று திகதி நிர்ணயித்த ஜனாதிபதி, பாராளுமன்றத்தை கடந்த மார்ச் 2ஆம் திகதி கலைத்தார்.

இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் நோய்ப் பரம்பல் காரணமாக தேர்தலை வரும் ஜூன் 20ஆம் திகதி நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மற்றொரு வர்த்தமானியை வெளியிட்டது. அந்த திகதியிலும் தேர்தலை நடத்தும் சூழல் நாட்டில் ஏற்படவில்லை.

நாட்டில் கொரோனா அச்சம் குறைவடைந்த நிலையில் பொதுத் தேர்தலை ஓகஸ்ட் 5ஆம் திகதி நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது. (ம-3)

## பிறந்தநாள...



அவர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஜெ.அன்பழகன், கொரோனா பாதிப்பு காரணமாக கடந்த 2ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளராகப் பணியாற்றி வந்ததுடன் இவர் திரைப்பட தயாரிப்பாளராகவும் விநியோகஸ்தராகவும் இருந்தவர் ஆவார்.

இதேவேளை அன்பழகன் 1958ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி பிறந்தார். தற்போது அவருக்கு 62 வயதாகின்ற நிலையில் அவரது பிறந்ததினத்தில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)



கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 10-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2444
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 16 21 24 26
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/06/10
சீட்டிழுப்பு இலக்கம் 4150
Y 9 6 7 4 1 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 519
C 19 06 11 46 55

# உலக சுகாதார ஸ்தாபனத்தினால் கொரோனா ஒழிப்புக்கு வழங்கிய 230 மில்லியன் டொலர் எங்கே?

## ஐ.தே.க தலைவர் ரணில் கேள்வி



(கொழும்பு)

**உலக சுகாதார ஸ்தாபனத்தினால் கொரோனா ஒழிப்புக்கு வழங்கப்பட்ட 230 மில்லியன் டொலர் (42.6 பில்லியன் ரூபாய்) நிதிக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.**

நேற்றுப் புதன்கிழமை மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்ட வேட்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின், போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் ,

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் கொரோனா ஒழிப்பிற்காக வழங்கப்பட்ட 230 மில்லியன் டொலர் (42.6 பில்லியன் ரூபாய்) நிதிக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்தால் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குத் தேவையான உபகரணங்கள், சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள், முகக் கவசங்கள் அல்லது செயற்கை சுவாசக் கருவிகள் (வென்டிலேட்டர்ஸ்) போன்ற எவையும் கொள்வனவு செய்யப்படவில்லை என்பதோடு அதற்காக வழங்கப்பட்ட நிதியுதவி எதற்காக செலவிடப்பட்டது என்று சுகாதார அமைச்சர் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஏனைய நாடுகள் கிடைக்கப் பெற்ற நிதியில் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளன. இவ்வாறிருக்கையில் இலங்கை வெளிநாடுகளில் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்யாவிட்டாலும் உள்நாட்டிலாவது கொள்வனவு செய்யாமலிருப்பது ஏன்? கேரளாவை உதாரணமாக எடுத்துக் கொண்டால் அவர்கள் தமக்கு கிடைக்கப் பெற்ற நிதியில் சுமார் 5000 செயற்கை சுவாச கருவிகளைக் கொள்வனவு செய்துள்ளதோடு, கேரள சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு போதுமானளவு மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

பாராளுமன்றம் கூட்டப்பட்டால் இந்த நிதியுதவிக்கு என்ன நடந்தது என்பது பற்றி சுகாதார அமைச்சரிடம் எம்மால் கேள்வியெழுப்ப முடியும். சுகாதார அமைச்சர் இது தொடர்பில் முறையான ஆவணத்தை மக்களுக்கு சமர்ப்பிக்க·வேண்டும்.

நான் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர் கள் பெரும்பாலானோர் தொடர்ச்சியாக நாளொன்றுக்கு 5000 பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்தினோம். ஆனால் அரசாங்கத்தால் அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்றார். (ம-3)

# மரண அறிவித்தல்



## திருமதி வள்ளியம்மை சிவசம்பு

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சிவசம்பு நேற்று (10.06.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்புவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் முத்துக்குமாரு - தெய்வானை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி (கனடா) மற்றும் சீதாலெச்சுமியின் (கனடா) அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி (ஜேர்மனி), கனகேஸ்வரி, தபோகரன், சிவாகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உமாகரன் மற்றும் அன்பரசி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகலிங்கம் (ஜேர்மனி), பத்மநாதன் (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்), பிரேமகுமாரி (ஜேர்மனி), செம்மனச் செல்வி (ஆசிரியர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பரதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் துஷ்யந்தி - ஜெகரன், விபுலா, வேந்தன், துஷ்யந்தன், துவாரகா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் பிரியதர்சன், பிரியங்கா, பிரேமி, பிரேவின், தங்கீர்த்தனன், மேனாளனன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2020) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ம் வட்டாரம்,
நயினாதீவு.

(2991)

தகவல்: குடும்பத்தினர்
077 774 0443

# புதையல் தோண்டிய மூவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா நத்திமித்திரகமவில் உள்ள கிப்புல்கல மலையில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த வைத்தியர் ஒருவரது மனைவி உட்பட மூன்று பேர் நேற்றுமுன்தினம் மாலை பொஹஸ்வெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

கிப்புல்கல மலைப் பகுதியில் சுமார் இரண்டு அடி ஆழத்திற்கு புதையல் தோண்டுவதாக பொஹஸ்வெவ பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார மூவரைக் கைது செய்துள்ளதுடன் பூஜைப் பொருட்கள், பித்தளை மோதிரங்கள், புதையல்தோண்டுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் அவர் களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

(ம-3,299)

ஆங்கில மொழி மூலமான பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமான கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் குழுக்களாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும். (C-9689)

தொடர்புகளுக்கு:- 0776293326

இலங்கை விசா நீடிப்பு

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT
எமது கிளைகள்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி, கொடிகாமம், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மருதங்கேணி, பருத்தித்துறை, சாவகச்சேரி, திருகோணமலை, மாணிப்பாய், வல்வெட்டித்துறை



(C-9624)

V2 TRAVELS 0768227499

A/L இரசாயனவியல் ZOOM

க.சிவத்திரன் B.Sc (Hons)

எனது வகுப்புக்கள் (2022 A/L, 2021 A/L) பாடசாலைகள், நேரடி தனியார் கல்வி நிலைய வகுப்புகள் ஆரம்பமாயினும் தொடர்ந்து Zoom இல் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

2022 A/L ⇨ Mon, Tue, Thur, Sat 7.30 pm - 9.00 pm

2021 A/L ⇨ Theory: Sun, Wed, Fri 7.30 pm - 9.00 pm; Paper Class: Mon 4.30 pm - 6.00 pm

2021 A/L ⇨ Theory (Physical) மின் இரசாயனம், அயன் சமநிலை Tue, Wed, Thursday 4.30 pm - 6.00 pm

2020 Day ⇨ Paper Class நடைபெறுகிறது Daily 4.30 am - 6.00 am

(2992)

(இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் அனைத்து வகுப்புக்களிலும் பங்குபற்றலாம்.)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை
# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை

நேரம்: ஒரு மணித்தியாலம் 15 நிமிடம் வினாப்பத்திரம் - 02

01. பின்வரும் பந்தியை வாசிக்க.

இரம்மியமான மாலைப்பொழுதில் கடற்கரையில் குளிர்ந்த காற்று எல்லோர் மீதும் பட்டுத் தழுவிச் செல்கிறது. சிறுவர்கள் ஓடியாடி விளையாடுகின்றனர். இருள் கசியத் தொடங்கியது. பறவைகள் கூடு நோக்கிச் செல்கின்றன. சுத்தமான காற்றை உள் வாங்கியோர் மெல்ல மெல்ல கலையத் தொடங்கினர். நானும் வீடு நோக்கி நடக்கின்றேன். மல்லிகையின் கமகம வாசனை காற்றோடு கலந்து மூக்கில் மோதிவிட்டுச் செல்கிறது.

- பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

01) ஒளி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

..........................................................................

02) பந்தியிலுள்ள இணைமொழி ஒன்றினை எழுதுக.

..........................................................................

03) பந்தியிலுள்ள இரட்டைக் கிளவிச் சொல்லை எழுதுக.

..........................................................................

04) மூக்கில் மோதிவிட்டுச் சென்றது எது?

..........................................................................

05) கூடு நோக்கிச் சென்றவை எவை?

..........................................................................

06) உயர்திணைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக?

..........................................................................

02. உயர்திணை பன்மை நிகழ்கால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

1) சிறுவர்கள், எழுதுகின்றார்கள், சிரித்தான் ,வந்தது

2) பின்வரும் வாக்கியம் அறிவித்தலா? அறிவுறுத்தலா என இனம் கண்டு எழுதுக?
"பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பயணச் சீட்டைப்பெறாவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும்"

..........................................................................

03. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

தண்ணீர் / ஒன்று / சென்றது / குடிப்பதற்காக / புள்ளிமான் / ஏரிக்குச்

..........................................................................

..........................................................................

04. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

1) யானைகள் கூட்டமாகச் சென்றன ( )
2) ஒவ்வொரு பூவும் அழகானது ( )
3) மரம் காற்றில் ஆடி அசைந்தன ( )

05. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

1) மனிதனுக்குப் பல விலங்குகள் உதவி புரிகின்றன

..........................................................................

2) அவர்தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே

..........................................................................

06. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியை எழுதுக.

1) சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது

..........................................................................

2) ஒற்றுமையே பலம்

..........................................................................

07. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி சரியான வாக்கியமாக எழுதுக.

1) கத்தரிச் செடி செளித்து வளர்ந்தது.

..........................................................................

2) அது நல்ல யோசணை என்று நினைத்தார்.

..........................................................................

08. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ் கீறுக.

1) நட்சத்திரம், நட்சத்திரம், நச்சத்திரம்
2) முயர்ச்சி, முயச்சி, முயற்சி

09. சரியான சொல்லை ஆக்கிப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1) ஆடல்கமை ..........................................
2) மொய்தாழி ..........................................

10. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து எழுதுக

1) அவர்கள் .......................................... போல் வாழ்ந்தார்கள்
(வாடி வதங்கி, நகமும் சதையும்)

2) ஆலய மணி .......................................... என்று ஒலித்தது
(சலசல, கணீர் கணீர்)

3) தெருக்கள் கூடுமிடம் ..........................................
(சதுக்கம், ஆச்சிரமம்)

11. பின்வரும் சொற்களில் எதிர்ப்பாற் சொற்கள் அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.

1) தேவன், தம்பி, தங்கை, நடிகன், நடிகை
2) மேலோன், நல்லவன், நல்லவள், பாட்டன், பாட்டி

12) பூ + அரும்பு என்பதைச் சேர்த்தெழுதுக.

..........................................................................


13. பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.

1) பஸ் நவதும் பொல ..........................................
2) யஹலுவா ..........................................

14. பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்க்கருத்தை எழுதுக.

1) National game ..........................................
2) leaves ..........................................

- 15 - 29 வரையான வினாவிற்கு விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

15. 

இவ்விலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை சொற்களில் எழுதுக?

16. இருபதாயிரத்து பத்தொன்பது என்பதை இலக்கத்தில் எழுதுக?

..........................................................................

17. பின்வரும் எண்களை இறங்கு வரிசையில் எழுதுக?
9489, 1089, 7800, 3890

..........................................................................

18. பாடசாலை ஒன்றில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 825, இதில் 442 பேர் பெண் பிள்ளைகள் ஆவர். அப்பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................

19. ஒரு பிள்ளைக்கு 4 அப்பியாசப் புத்தகங்கள் வீதம் 84 அப்பியாசப் புத்தகங்களை எத்தனை பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்க முடியும்?

..........................................................................

20. பருப்பு **1kg** ரூபாய் 160.00 எனின், **500g** பருப்பின் விலை யாது?

..........................................................................

21. 2 மணித்தியாலம் 30 நிமிடத்தில் எத்தனை நிமிடங்கள் உள்ளன?

..........................................................................

22. தேக்கரண்டி கொள்ளும் திரவத்தின் அளவு **5ml** ஆகும். தினமும் காலையும் மாலையும் இரண்டு தேக்கரண்டி வீதம் எடுக்கும் நோயாளிக்கு எவ்வளவு திரவமருந்து தேவை?


..........................................................................

23. ஒரு தட்டில் 35 பூக்கள் உள்ளன. இவ்வாறான இரண்டு தட்டுக்களில் உள்ள பூக்கள் எத்தனை?

..........................................................................

24. 2kg 250g இலுள்ள 250gகள் எத்தனை?

..........................................................................

25. 

தரப்பட்ட வரைபடத்தில் மாணவன் ஒருவன் A என்ற இடத்தில் இருந்து பயணித்து B என்ற இடத்திற்குச் சென்றான் எனின், மாணவன் ஆரம்ப இடத்திலிருந்து எத்திசையில் நிற்கின்றான்?


..........................................................................

26. 3m 50cm நாடாவில் இருந்து 1m 25cm துண்டொன்று வெட்டி அகற்றப்பட்டது. அகற்றப்பட்ட பின் எஞ்சிய நாடாவின் நீளம் யாது?

..........................................................................

27. இரண்டு ரூபாயிலுள்ள 25 சதங்கள் எத்தனை?

..........................................................................

28. 
பின்வரும் பொருள் தொகுதியின் அரைவாசி எத்தனை?

..........................................................................

29. அட்டவணையின் உதவிகொண்டு விடை எழுதுக.

| பொருள்கள் | நிறை |
|---|---|
| அரிசி | 3kg 200g |
| கிழங்கு | 1 kg 400g |
| கடலை | 3 kg 600g |
| பருப்பு | 1 kg 225g |

1) கிழங்கின் நிறை அரிசியின் நிறையிலும் எவ்வளவு குறைவாகும்.

..........................................................

2) கடலையினதும், பருப்பினதும் மொத்த நிறை யாது?

..........................................................

● 30 - 59 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

30.



தரப்பட்ட உரு சூரிய நமஸ்காரப் படிமுறைகளில் எத்தனையாவது கட்டம்?

1. இரண்டாவது 2. ஐந்தாவது
3.ஆறாவது 4. பன்னிரண்டாவது

31. இலங்கையின் தேசிய மலர்.
1. லில்லி மலர் 2. ஆம்பல்
3. நீலோற்பலம் 4. தாமரை

32. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் மூன்றாவது கட்டம்.
1. முட்டை 2. கூட்டுப்புழு 3. நிறையுடலி 4. குடம்பி

33. நோய்க் காவிகளான ஆட்கள் மூலம் பரவும் நோய்களில் ஒன்று.
1. டெங்கு 2. மலேரியா 3. சின்னமுத்து 4. கொலரா

34. பின்வரும் தாவர வகையில் அவித்து பானமாகப் பயன்படுத்துவது எது?
1. வல்லாரை 2. சாத்தாவாரி 3. வில்வம் பூ 4. பொன்னாங்கண்ணி

35. தோலால் சுவாசிக்கக்கூடியதும் கால்கள் அற்றதுமான பிராணி எது?
1. நாய் 2. கிளி 3. மண்புழு 4. மீன்

36. நாம் உண்ணும் உணவினால் கிடைக்கும் நன்மைகளில் பொருத்தமற்றது.
1. உடலுக்குச் சக்தி கிடைத்தல்
2. உடலாரோக்கியம் குன்றுதல்
3. உடல்வளர்ச்சியடைதல்
4. நோய் நொடிகளிலிருந்து பாதுகாப்புக் கிடைத்தல்

37. வீட்டுத்தோட்டப் பயிர்களைப் பாதுகாக்க நடப்படும் பயிர்.
1. மல்லிகை 2. தாமரை 3. செவ்வரத்தை 4. செவ்வந்தி

38. உலோகக் கரண்டி மீதுள்ள நீரை மெழுகுதிரிச் சுவாலையில் சூடாக்கும் போது நடைபெற முடியாதது.
1. நீர் சூடாகும்
2. நீர் படிப்படியாகக் குறையும்
3. ஆவியாகும்
4. நீர் பனிக்கட்டியாக உறையும்

39. இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் அதிகம் உண்ணுதலால் ஏற்படும் நோய்
1. சின்னமுத்து 2. டெங்கு
3. நீரிழிவு 3. சீதபேதி

40. பச்சை நிறத்தைப் பெற எந்த இரு மூல வர்ணங்கள் சேர்க்கப்பட வேண்டும்?
1. சிவப்பு + வெள்ளை 2. கறுப்பு +நீலம்
3. நீலம் + மஞ்சள் 4. நீலம் + சிவப்பு


41. மின்னல் மின்னும் போது செய்யக் கூடாதது.
1. வீட்டினுள்ளே இருத்தல்
2. திறந்த வெளியில் நிற்றல்
3. மூடிய வாகனத்தினுள் இருத்தல்
4. மின்சாதனங்கள் பயன்படுத்தாதிருத்தல்


42. பேருந்தில் விசேடமாக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது.
1. ஆண்களிற்கு
2. பெண்களிற்கு
3. அங்கவீனர்களுக்கு
4. குழந்தைகளிற்கு


43. சேதனப் பசளை அல்லாதது?
1. யூரியா 2. ஆட்டெரு
3. மாட்டெரு 4. கோழியெரு


44. யோகட் ஒன்றை வாங்கும் போது கட்டாயம் கவனிக்க வேண்டியது.
1. காலாவதித் திகதி 2. சுவையூட்டிகள்
3. விலை 4. அளவு

45. பின்வருவனவற்றுள் துளைக்கருவி எது?


(1)


(2)


(3)


(4)

46. பூக்களை நாடிவரும் பிராணிகளின் கூட்டம்
1. அணில், எலி, பூனை
2. காகம், எலி, பருந்து
3. நுளம்பு, தும்பி, வெட்டுக்கிளி
4. வண்ணத்துப்பூச்சி, தேனீ, குளவி

47. சட்டக்காந்தம் ஒன்றின் எப்பகுதியில் அதிக குண்டூசிகள் கவரும்?
1. நடுப்பகுதி 2. எப்பகுதியிலும் கவராது
3. முனைப்பகுதி 4. ஓரப்பகுதி


48. வேகமாக ஓடும் திறன் கொண்ட விலங்கு.
1. பசு 2. மான்
3. ஆடு 4. உடும்பு

49. உணவை பொதி செய்யும் பொலித்தீனுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடியது.
1. வேப்பிலை 2. வாழையிலை
3. பலாவிலை 4. மாவிலை

50. தென்மாகாணத்தில் உள்ளடங்கும் மாவட்டம்.
1. கண்டி 2. காலி
3. கொழும்பு 4. நுவரெலியா

51. தண்டில் உணவு சேமித்து வைக்கும் தாவரம் எது?
1. மரவள்ளி 2. கரும்பு
3. வாழை 4. முருங்கை

52.



இக் குறியீடு குறித்து நிற்பது யாது?
1. மேலே செல்லவும்
2. இப்பக்கம் மேலே
3. மேலே ஏறவும்
4. மேல் நோக்கிப் பார்க்கவும்


53. வரண்ட பகுதித் தாவரம் எது?
1. நாகதாளி 2. புளி 3. பனை 4. அல்லி

54. எல்லா மதத்தினரும் போற்றி வழிபடும் மலை எது?
1. சிகிரியா குன்று 2. சிவனொளிபாத மலை
3. நக்கிள்ஸ் மலை 4. பேதுருதாலகாலமலை

55. நீராவியைப் பயன்படுத்தி சமைக்கப்படும் உணவு.
1. தோசை 2. இடியப்பம்
3. ரொட்டி 4. சோறு

56. தகரத்தில் அடைத்துப் பாதுகாக்கும் உணவு யாது?
1. தேசிக்காய் 2. மீன்
3. முட்டை 4. பாகற்காய்

57.




சாதாரண நீர் இடல் | நீர் + தேங்காய் எண்ணெய் படை | கொதித்தாறிய நீரில் இடல் | கொதித்தாறிய நீர் + தேங்காய் எண்ணெய் படை

மேலே காணப்பட்டவாறு இடப்பட்ட வித்துக்களில் முளைக்கக் கூடியது.
1. A 2. C
3. D 4. B

58. சைக்கிளை இலகுவாக ஓட்டிச் செல்ல பெரிய பற்சில்லும் சிறிய பற்சில்லும் இணைக்கப்பட்டிருப்பது.
1. சங்கிலி 2.மக்காட்
3. மிதி 4. ரயர்

59. "ஏலேலோ ஐலசா..." என்ற பாடல் பாடும் சந்தர்ப்பம் எது?
1. அரிவு வெட்டல் 2.சுரங்கம் அகழ்தல்
3. சேனை காத்தல் 3.படகோட்டல்

60. "எமது பாடசாலை அழகானது" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியங்களிலும் ஐந்து சொற்கள் காணப்படுவதுடன் சரியான எழுவாய் பயனிலைத் தொடர்பு காணப்படவேண்டும்.)

1 ..........................................................
..........................................................
2. ..........................................................
..........................................................
3. ..........................................................
..........................................................

## தரம்-5 புலமைப்பரிசில் வினாப்பத்திரத்திற்கான விடைகள் பகுதி -01

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 11) | 1 | 21) | 3 | 31) | 2 |
| 2) | 2 | 12) | 1 | 22) | 3 | 32) | 2 |
| 3) | 2 | 13) | 1 | 23) | 3 | 33) | 2 |
| 4) | 1 | 14) | 3 | 24) | 2 | 34) | 1 |
| 5) | 1 | 15) | 2 | 25) | 3 | 35) | 3 |
| 6) | 2 | 16) | 1 | 26) | 1 | 36) | 2 |
| 7) | 3 | 17) | 1 | 27) | 2 | 37) | 3 |
| 8) | 2 | 18) | 3 | 28) | 2 | 38) | 1 |
| 9) | 2 | 19) | 2 | 29) | 1 | 39) | 2 |
| 10) | 2 | 20) | 1 | 30) | 2 | 40) | 3 |